# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 20 சனிக்கிழமை (06-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:314


## அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு தமிழர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் இழுபறி!

### திங்களன்றே முடிவு

கொழும்பு,ஒக்ரோபர்06

**17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு இலங்கைத் தமிழர் மற்றும் மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் பெரும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

இந்த இருதரப்பினதும் சந்திப்பில அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஒவ்வொரு பிரதிநிதிகளையும் தெரிவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட இனப் பிரிவுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள மண்டபத்தில் கூடினர்.

அந்தக் கூட்டத்தில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

### நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் குறித்து திங்கள் முடிவு

கொழும்பு,ஒக்.6

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐதேகட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்பது குறித்து நாளைமறுதினம் (திங்கட்கிழமை) நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

அரச தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான றெஜி ரணதுங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இயன்ற விரைவில் விவாதத்துக்கு எடுப்பதாக சபை முதல்வர் ரிச்சர்ட் பத்திரான உறுதியளித்துள்ளார் எனவும் -

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 9 ஆம் திகதி இந்தப் பிரேரணை மீதான விவாதத்துக்கு இணங்குவதன் மூலம் அவர் தனது உறுதிமொழியைக் காப்பாற்றிக் கொள்வார் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் -

ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தா.

### மன்னார்ப் பகுதிக் கடலில் இரு மீனவர் சுட்டுக்கொலை

மன்னார் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் பகல் வேளையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர்.

கடற்படையினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சுமத்தினர். -

முல்லைத்தீவைச் சேர்ந்த தனம் நந்தகுமார் (வயது19), பாண்டியன் குளத்தைச் சேர்ந்த செல்வநாயகம் செல்வகுமார் (வயது18) ஆகிய இருவருமே சூட்டுக்கு இலக்காகி பலியானவர்களாவர்.

அந்த மீனவர்களின் படகுகளும் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

### ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை: விசாரணைகளில் முன்னேற்றமாம் நீதிமன்றில் சி.ஐ.டியினர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.6

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாகத் தாங்கள் நடத்திவரும் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது - என்று அந்தக் கொலை குறித்து விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலீஸ் குழு யாழ்.நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியின் ரகத்தை அறிய, ஏற்கனவே மீட்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சன்னங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த அனுமதிக்க வேண்டும் - என்று பொலீஸ் குழுவின் சார்பில் மனு ஒன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, அந்தப் பாகங்களை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். (க-3)

### போரதீவில் புலிகள் நடத்திய தேடுதல்

மட்டக்களப்பு,ஒக்.6

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான போரதீவுப் பிரதேசத்தை நேற்று புலிப்போராளிகள் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது பிரதேசத்துக்குள் ஊடுருவியுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கண்டுபிடிக்கவே புலிகள் இத தேடுதலை நடத்தினர் என்றும் கூறப்பட்டது. (க-3)

### குண்டுகள் மீட்பு

கொழும்பு,ஒக்.6

குருநாகல் அணைக்கட்டுப் பகுதியில் இருந்து இரு குண்டுகள் நேறறு மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கொடுத்த தகவலின்பேரில் மீட்கப்பட்ட இரு குண்டுகளும் பின்னா செயலிழக்கச் செய்யப்பட்டன.(க-3)

### திருமலை அரச அதிபரின் இடமாற்றத்துக்கு எதிராகத் தடை உத்தரவு

திருகோணமலை அரச அதிபர் எஸ்.டி.சந்திரதாஸாவின் இடமாற்ற உத்தரவை இடைநிறுத்தி வைக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது இடமாற்ற உத்தரவுக்கு எதிராக எஸ்.டி.சந்திரதாஸா தாக்கல் செய்திருந்த உரிமைமீறல் மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு இந்த இடைக்காலத் தடையுத்தரவை உயர் நீதிமன்றம் நேற்று விடுத்தது. (உ)

### கனடா ரொரண்டோவில் 300 ஈழத்தமிழர் கைது!

ரொரண்டோ,ஒக்.6

கனடாவின் பிரதான நகரமான ரொரண்டோவில் நேற்று அதிகாலை பொலீஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சுமார் 300 ஈழத்தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக் காலத்தில் கொலை, கொள்ளை, பெண் கடத்தல், வாகனக் கடத்தல் போன்ற சம்பவங்களில் ஈழத்தமிழர்களே அதிகளவில் சம்பந்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே -

அவர்களின் வதிவிடங்கள் மற்றும் அவர்கள் பணிபுரியும் தொழிலகங்களில் இந்தத் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்படுவதாகச் செய்திகள் தெரிவித்தன. (க-3)

### முல்லை கடற்பரப்பில் நேற்று மூன்று மணிநேரம் கடும் சமர்!

வவுனியா,ஒக்.6

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுக்காலை ரோந்து சென்ற கடற்படையின் டோறாப் படகை வழிமறித்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து அங்கு மூன்று மணிநேரம் கடும் கடற்சமர் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் டோறாப் படகு சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இரு படகுகளை மூழ்கடித்ததாகவும் -

விடுதலைப் புலிகளின் 25 உறுப்பினர்கள் உயிரிழந்ததாகவும் - பாதுகாப்புத்தரப்பு அறிவித்துள்ளது.

தமது தரப்பில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும், இருவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்துத் தெரியவரவில்லை என்றும் -

தமது தரப்பில் இழப்பு ஏதும் இல்லை என்றும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (க-3-7)

### 200 இலங்கையர் இத்தாலியிலிருந்து நாடு கடத்தல்!

கொழும்பு,ஒக்.6

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கருதப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இருநூறு இலங்கையர்கள் நேற்று விமானம் மூலம் கொழும்புக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (க-3)

### திருமலை பாலம்பட்டாறு பகுதியில் நேற்று கிளைமோர் தாக்குதல்

#### இரு படையினர் பலி; இருவர் காயம்

திருகோணமலை,ஒக்.6

திருகோணமலை மாவட்டம் - பாலம்பட்டாறுப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட கடற்படையினர்மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

பாலம்பட்டாறுப் பகுதியில் உள்ள கடற்படையினரின் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கான பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினாமீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கிளைமோர்த் தாக்குதலையடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் மூண்டது என்றும் -

இதில் விடுதலைப் புலிகள் தரப்பில் 8 பேர் பலியாகினர் என்றும் படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பல ஆயுத தளபாடங்களைத் தாம் கைப்பற்றியதாக அறிவித்த விடுதலைப் புலிகள், தங்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. (க-7)

### நோர்வேயின் அரசியல் தலையீட்டை தடுத்து நிறுத்தியது ஜே.வி.பியே!

#### அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.6

இனப்பிரச்சினைத்தீர்வு என்ற போர்வையில் நோர்வே அரசு மேற்கொண்ட அரசியல் தலையீட்டைத் தடுத்து நிறுத்தியவர்கள் தாங்களே என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலரும், எம்.பியுமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நோர்வே அரசு வஞ்சக மனப்பான்மையுடன் செயற்பட்டுள்ளது. இந்த மனப்பான்மையுடனேயே அது சமாதான முயற்சிகளிலும் தலையிட்டது. இதனை எவரும் மறுக்க முடியாது.

இந்த அரசுடன் நாங்கள் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சைவத்திற்கும் தமிழுக்கும் பெருமை



அன்பே சிவம்
அதுவே உமது குணம்
அறமே திறம்
அதுவே உமது பலம்
அறிவே தரம்
அதுவே உமது நலம்!

தமிழைத் தன் மூச்சாகவும் - சைவத்தை தன் வாழ்வாகவும் கொண்ட

## அருட்கவி சீ.விநாசித்தம்பி

அவர்களுக்கு கௌரவ முதுமாணிப் பட்டம் வழங்கியதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகம் பெருமை சேர்க்கின்றது.

சுடர் மகேந்திரன் குடும்பத்தினர்.


## ஆங்கில படிப்பு வட்ட கருத்தரங்கு

யாழ்.ஆங்கிலப் படிப்பு வட்டக் கருத்தரங்குத் தொடரில் அடுத்த கருத்தரங்கு நாளை பி.ப 3மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'ஆங்கிலம் கற்பிக்கும் நுட்பங்கள்'(English teaching Techniques) என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ள கருத்தரங்கில் 'பல்வேறு மட்டங்களிலும் ஆங்கிலம் கற்பிக்கும் நுட்பங்களின் ஒப்பீடு' என்னும் தலைப்பில் செல்வி கிறேஸ் பரங்கரும் - 'பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கிலம் கற்பித்தல்' என்னும் தலைப்பில் திருமதி எஸ்.ரவீந்திரனும் - கருத்துரை வழங்கவுள்ளனர்.

ஆர்வலர்கள் இக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## 'வணிகத் தென்றல்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.6

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் 'வணிகத்தென்றல் இதழ் -2' சஞ்சிகை வெளியீட்டுவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு 1999,2000, 2001 ஆம் ஆண்டுகளில் கற்ற வணிக, கலைத்துறையைச் சார்ந்த மாணவர்களையும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வணிக மாணவர் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (கஈ)

## கிணற்றிலிருந்து 6 ஷெல் குண்டுகள் மீட்பு!

தென்மராட்சி,ஒக்.6

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் கிணறு இறைத்த போது கிணற்றுக்குள் வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஆறு ஷெல்கள் படையினரால் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் கடந்த புதன்கிழமை சங்கத்தானை கைலாயபிள்ளை வீதியிலுள்ள கிணற்றை இறைத்தபோது அதில் ஷெல்கள் கிடப்பதைக் கண்டனர் அவர்கள் கொடுத்த தகவலின்பேரிலேயே அந்த 6 ஷெல்களும் மீட்கப்பட்டன. (கூ-117)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2001

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | ற.சாதனா | 152 | 10. | கு.மயூரா | 122 |
| 02. | சி.இராமநிரஞ்சனி | 146 | 11. | ச.பாலமுரளன் | 122 |
| 03. | சி.கங்காசுதன் | 136 | 12. | கு.சுகி | 122 |
| 04. | ம.ஜனகன் | 130 | 13. | ச.நிர்த்திகா | 121 |
| 05. | ஆ.சிறோம் | 129 | 14. | சி.புனோஜன் | 120 |
| 06. | க.கிருசிகன் | 129 | 15. | க.சிவசுரன் | 118 |
| 07. | வி.திவ்வியா | 125 | | | |
| 08. | த.கம்சிகா | 124 | | | |
| 09. | இ.வைஷ்ணவி | 123 | | | |

கோட்ட, வலய மட்டத்தில் வகை - II பாடசாலைகளில் இம்முறையும் தனிப் பெருமையைத் தேடித்தந்த இவர்களையும், இணைந்து தோற்றிய செல்வங்களையும், இன்று உலக ஆசிரியர் தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் நல்வழிகாட்டிகளான அதிபர், ஆசிரியர்களையும் மேலும் பணி சிறக்க, நீடூழிவாழ எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்!

பா.அ. சங்கம், ப.மா.சங்கம்,
பெற்றோர்கள்.

(93050)



## யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2001

சித்தியடைந்தோர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விசாகன் | S. - 157 புள்ளிகள் | | மோகனராம் | S. - 137 புள்ளிகள் | |
| வேணுசரன் | N. - 154 | " | சுஜந்தினி | S. - 136 | " |
| தஜீபன் | S. - 150 | " | கஸ்தூரி | K. - 126 | " |
| சபேசன் | S. - 150 | " | வித்தகி | P. - 130 | " |
| பிரசன்னா | S. - 143 | " | லக்ஷி | K. - 130 | " |
| நிரூசன் | T. - 142 | " | ஆர்த்திகா | A. - 120 | " |
| ஜெகத் | T. - 135 | " | நிரோசன் | T. - 119 | " |
| வைணவி | S. - 134 | " | தாரணி | K. - 119 | " |
| சங்கீர்த்தனா | R. - 131 | " | | | |

இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/சாவ.இந்து ஆரம்ப பாடசாலை.

(93051)



புலமைப்பரிசில் - 2001
பரீட்சை இல.04
உச்சபுள்ளி பெற்றோர்

S. சாரங்கன் - 180
J. புபேஸ் - 159
M. ஜோன்பிரியந்த் - 156

அடுத்த பரீட்சை
நாளை 07.10.2001

சுந்தர் வெளியீடு
38, கோயில் வீதி, யாழ்

(93069)



# "LYCEUM" பெருமையுடன் வாழ்த்துகின்றது

இன்று யாழ்.பல்கலையில் பட்டமளிப்பு விழாக்காணும் LYCEUM உறுப்பினர்களான





ம.துஷ்யந்தன் B.A.(Hons) | சி.சிவசுதன் B.A.(Hons) | சோ.கவிநேசன் B.A.(Hons)





கு.கனகேஸ்வரன் B.Com.(Hons) | த.ஜெயசுரேஷ் B.Com.(m.m.spl.) | கி.சுகிர்தானந்தம் B.Com.(m.m.spl.)

ஆகியோர், வாழ்வில் அனைத்துச் செல்வங்களையும் பெற்று மகிழ்ச்சிகரமான எதிர்காலத்தை பெற LYCEUM நண்பர்கள் பெருமையுடன் வாழ்த்துகின்றார்கள்.

"நீங்கள் உங்களுக்காக அல்லாமல்
இந்த உலகத்துக்காகச் சிந்தியுங்கள்"

சட்டநாதர் வீதி, நல்லூர். LYCEUM LOVE OF WISDOM.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பல்கலையும்கற்று இன்று பட்டத்தைப் பெற்றிடும்
வடமராட்சி மண் பெற்றெடுத்த

சி.தயானந்தன் B.Com. (Hons - m.m. Spl.)
கி.சுகிர்தானந்தம் B.Com. (m.m. Spl.)
செ.ரவீந்திரன் B.Com. (m.m. Spl.)
இரா.அகிலன் B.A. (Hons - Hindu. Spl.)
சோ.கவிநேசன் B.Com. (Hons - Soci. Spl.)

இவர்களை உளமகிழ்ந்து பாராட்டுவதுடன், மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற்று சீரும்சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

"ELYSIUM",
3 ஆம் கட்டை,கல்வியங்காடு. (93070) - அன்பு நண்பர்கள்.





# வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
2001 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் ஆங்கிலத்துறையில்
முது தத்துவமாணிப் பட்டம் பெறும்
இணுவை மைந்தன்

திரு.கந்தையா ஸ்ரீகணேசன் B.A. (Hons), M.Phil.

அவர்கள் கல்வித்துறையிலும்,
கலை இலக்கியத் துறையிலும் மேலும் பல உயர்ச்சிகளையடைய
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

இணுவில் வாழ் நண்பர்கள்,
மாணவர்கள்.



# பாராட்டும் இறையருளும்



வெள்ளி விழா நாயகரும், சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியரும், வேலணை - ஊர்காவற்றுறை மணி கல்வி நிறுவன இயக்குநருமான

திரு. T.தனேந்திரன்
B.Com. (Hons) m.m. Spl.

வணிகமாணிப் பட்டத்தைப் பெறுவதைப் பாராட்டுவதுடன், மேலும் பல உயர்வுகளைப் பெற இறையருளை வேண்டுகின்றோம்.

- ஆசிரியர்கள்.

மணி கல்வி நிறுவனம் - வேலணை - தலைமை நிறுவனம்,
மணி கல்வி நிறுவனம் - ஊர்காவற்றுறை - கிளை நிறுவனம்.

(93075)



# ஆசிரியர் தினம் 06.10.2001

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு
## தமிழர் விடுதலைக் கூட்டணி
## விடுத்துள்ள



# வாழ்த்துச் செய்தி

தமிழ் மக்களின் கல்விச் செல்வத்தைப் பேணிக்காத்து, அதற்கு உரம் ஊட்டும் தியாக சீலர்களாகிய ஆசிரியப் பெருந்தகைகளின் பணிகளை நன்றியுடன் நினைவு கூரும் இந்த நன்னாளில் அவர்தம் பணிகள் மேன்மேலும் சிறப்புற்று, தமிழ் மாணவர்களின் எதிர்காலத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைய எமது நல் வாழ்த்துக்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி,
யாழ்.மாவட்டச் செயலகம்.

(...8556)



# வாழ்த்துகின்றோம்

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக அயராது உழைக்கும்

## I.B.S. கல்வி நிறுவன

ஆசிரிய குழாமை ஆசிரிய தினத்தில் மனதார வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். என்றென்றும் இவர்கள் பணி தொடர வாழ்த்தும்.

I.B.S. இல் கல்வி கற்கும்
மாணவ மாணவிகள்.

(93068)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

இன்று (06-10-2001) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுபவர்களான,

| | |
|---|---|
| தமிழ் ஒளி ச.ச. நிலையத்தின் பொருளாளர் | தமிழ் ஒளி ச.ச, நிலைய அங்கத்தவர் |
| **திரு.பா.பாலகிரிதரன் (கிரி)** | **திரு.ம.யூஜின்கலிஸ்றஸ் (யூஜின்)** |
| B.A. (Hons) Geo .Spl | B.Sc. |

ஆகிய இருவரையும் நாம் பாராட்டுவதுடன் இன்னமும் மேன்மேலும் பல உயர்வுகளைப்பெற வாழ்துகிறோம்.

நிர்வாகம்,
தமிழ் ஒளி ச.ச. நிலையம்,
உடுவில்.

*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.*

(93053)

# வாழ்த்துகின்றோம்

## உலக ஆசிரியர் தினம் - 2001

**யா/யூனியன் கல்லூரியின்** வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் அதிபர், உப அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளை இன்றைய ஆசிரியர் தினத்தில் உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (மருதனார்மடம்)

(93046)

# வாழ்த்துகின்றோம்

இன்று 6.10.2001ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி (சிறப்பு) பட்டம் பெறும் எமது இந்து நாகரக ஆசான்
**திரு.இ.இராஜேஸ்கண்ணன் அவர்களையும்**
கல்வியியல் டிப்ளோமா பட்டம் பெறும் எமது அளவையியல் ஆசான்
**திரு.ஆ.பிரபானந்தன் அவர்களையும்**
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
கலைப்பிரிவு மாணவர்கள்,
***N.C.A.*** *கல்வி நிலையம், பருத்தித்துறை.*

(93034)

# பெருமையுடனும் பெருமகிழ்வுடனும்...

ஆசிரியப் பணியில் இருபத்தைந்தாண்டுகள் சிறப்புற நிறைவெய்திய
*திரு. இ.ம. சிவசுப்பிரமணியம்* *திரு. சி. சிவகுமாரன்*
*திருமதி வி. கணேசரட்ணம்* *திருமதி அ. சண்முகலிங்கம்*
*திருமதி செ. மகேஸ்வரநாதன்*
ஆகியோரை மனமார வாழ்த்துகின்றோம்.

*ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

(C/18543)


# NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

**2002 A/L**
✲ தொழில் இரசாயனம் ✲
(வளங்கள்) சனி, ஞாயிறு 6 a.m.

**2003 A/L**
✲ அசேதன இரசாயனம் ✲
சனி, ஞாயிறு 7 a.m.

**2001 A/L** (பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு
✲ வினா விடை வகுப்பு ✲
(கடந்தகால வினாக்கள்)
சனி, ஞாயிறு 8 a.m.

ஆசிரியர்:
**திரு.மகேஸ்வரன் B.Sc.**
ஆரம்பம்: நாளை (07.10.2001) ஞாயிறு

(93056)


We Serve

# கோப்பாய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம்

நாள் :- நாளை (07-10-2001) ஞாயிற்றுக்கிழமை.
நேரம் :- காலை 9.30 மணிமுதல்.
இடம் :- சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

- ☆ மருத்துவர்களினால் பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்படும்.
- ☆ நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப்படும்.
- ☆ எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தினரால் கண் பரிசோதிக்கப்பட்டு வறுமைக்கோட்டிற்குட்பட்டோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.
- ☆ கழகத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறவிருப்பதால கழக அங்கத்தவர்கள் யாவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

தலைவர்/செயலாளர்,
கோப்பாய் லயன்ஸ் கழகம்.

(93062)

# ஆப்கன் மக்களுக்கு 32 கோடி டொலர் அமெ.நிதியுதவி

நியூயோர்க்,ஒக்.6

ஆப்கானிஸ்தானில் தற்போது நிலவிவரும் கடும் வரட்சியினால் ஏற்பட்டுள்ள பட்டினியில் இருந்து ஆப்கான் மக்களைக் காப்பதற்காக 32 கோடி டொலர் நிதி உதவி வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் இந்த நிதிஉதவி குறித்து நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

"ஒசாமா பின்லேடனின் பதுங்கு மிடங்களையும் அவரது அல்கெய்டா அமைப்பின் முகாம்களையும் தாக்கி அழிப்பதற்கான ஏற்பாடுகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக அமெரிக்கப் படைகள் அங்கு குவிக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம் மறுபுறத்தில் பட்டினியால் வாடும் ஆயிரக் கணக்கான ஆப்கான் மக்களுக்கு 'பரசூட்' மூலம் உணவு போடுவது குறித்தும் சிந்தித்து வருகின்றோம்" - என்றார் அதிபர் புஷ்.

அமெரிக்காவின் இந்த உதவிகள் தேவையானவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக, அமெரிக்கா உலக உணவுத் திட்டம் மற்றும் ஆப்கனில் உள்ள தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனல்ட் றம்ஸ்வீ தெரிவித்தார். (ம)

## பிரிட்டன் தெரிவு

நியூயோர்க்,ஒக்.6

ஐ.நா.பாதுகாப்புச் சபையால் அண்மையில் உருவாக்கப்பட்ட தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தும் ஆணைக்குழுவின் தலைமைப் பதவிக்கு பிரிட்டன் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

தீவிரவாதத் தாக்குதல்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஐ.நா.பாதுகாப்புச்சபை அண்மையில் எடுத்த தீர்மானம் செயற்படுத்தப்படும் வழிவகை குறித்து இக்குழு கண்காணிக்கும்.

இந்த ஆணைக்குழுவின் உப தலைமைப் பதவிக்கு கொலம்பியா, மொறீஷியஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் நியமிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 28ஆம் திகதி ஐ.நா.பாதுகாப்புச் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி -

தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவோர், அவர்களுக்கு உதவியளிப்போர் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். தீவிரவாத அமைப்புகளுக்கு பொருளாதார வசதி அளிக்கும் சொத்துக்கள் அனைத்தையும் ஐ.நா.உறுப்பு நாடுகள் எல்லாம் முடக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ம)

## பிளயர் - வாஜ்பாய் தொலைபேசி மூலம் பேச்சு

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் மாநில சட்டசபையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாயும் தொலைபேசி மூலம் உரையாடி உள்ளனர்.

இந்தத் தாக்குதலை பிரதமர் பிளயர் அப்போது கடுமையாகக் கண்டனம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

## வெள்ளத்துக்கு 11பேர் பலி!

பிறேஸிலின் தென்பகுதியில் கடும் இடிமின்னலுடன் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெரும் மழையினால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளம் காரணமாக சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

தெற்கு மாவட்டங்களில் உள்ள 27 கிராமங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. இப்பகுதிகளுடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. தொடர்புகள் துண்டிக்கப்பட்ட இடங்களில் இன்னும் சிக்கிக் கொண்டுள்ளவர்களுக்கு ஹெலிகள் மூலம் உணவுப் பொருள்கள் போடப்பட்டு வருகின்றன. (ம-4)

சிவமயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இன்று (06-10-2001) சனிக்கிழமை
தெய்வீகப் பெருந்தகை அளவையூர்
## அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் அவர்களுக்கு
'முதுகலைமாணி'
எனும் கௌரவப் பட்டத்தை வழங்குகிறது. இவர்பால் உள்ள அன்பின் நிமித்தம் பாடிய வாழ்த்துப்பா



அளவையூர் தந்தநல் லருட்கவி ஐயா! வாழி!
அவனியோர் போற்றும்நல் லருட்குரு வாழி! வாழி!
இளநகை காட்டி இருள்தனை யகற்றுமெங்கள்
இனியனே! முதுகலைமாணியே!
அம்பலத்தான் நாயகி அருள் சேர்ந்து நிற்க
இம்மானிலத்தென்றும் இறையருள் பரப்பி வாழி!

பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழி!
சொல்லாண்ட ஞானநெறி கருதிபோல் நீடுவாழி!
பல்கலை யோர் எடுக்குமிப் பெருவிழா நாதனே!
முதுகலைமாணி நாயக! நலமுடனென்றும் வாழி!

*சுபமங்களம்*

*2 ஆம் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*
*06-10-2001*

அன்பொழிந்து நல்கும் —
ஐ.கோ.சந்திரசேகரம் குடும்பம்,
மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் (மார்ஷல்),
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(93038)

# சிவாச்சாரியர்களுக்குப் பட்டமளிப்பு

நாளை (7-10-2001) ஞாயிற்றுக்கிழமை இணுவில் காயத்ரீ பீடத்தில் நடைபெறும் காயத்ரீ ஹோமப் பெருவிழாவில் "சிவாகமக் கிரியா தத்வநிதி" பட்டம் பெறுபவர்கள்

**பிரம்மஸ்ரீ தி.கங்காதரக் குருக்கள்**
*(ஈவினை பிள்ளையார் கோயில்)*

**பிரம்மஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள்**
*(ஊரெழு அம்மன் கோயில்)*

**பிரம்மஸ்ரீ செ.ரவீந்திரக் குருக்கள்**
*(வெளிவயல் அம்மன் கோயில்)*

** பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்களும் தர்மசாஸ்தாகுருகுல மாணவர்களும்.*

(93029)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 17 - 01 - 1935



மறைவு 06 - 09 - 2001

## திருமதி பாலகிருஷ்ணன் விசாலாட்சி

இன்று (06-10-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அவரது வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளிலும் மற்றும் மதியபோசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ.பாலகிருஷ்ணன்
குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தற்காலிக முகவரி:
*மித்தில் கரை,*
*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

(93041)

# பாராட்டு

**திரு. நா. ஆனந்தராசா அவர்கள்**

அதிபர் தரம் 2 - 1 இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு ஆசிரியதினமாகிய இன்று அவர் மேலும் பட்டங்கள் பல பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ பன்னாலை
சேர் கனகசபை அ.த.க. பாடசாலை.
(93052)

## வாழ்த்துகின்றோம்

# உலக ஆசிரியர் தினம் - 2001

யா / யூனியன் கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துக் கொண்டிருப்பவர்களான அதிபர், உப அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளை இன்றைய உலக ஆசிரியர் தினத்தில் மனதார வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
(93048) (மருதனார்மடம்)

# உலக ஆசிரியர்தின வாழ்த்து

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி, அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களே! உங்களை நினைக்கவில்லை! ஏனென்றால் மறக்கவில்லை!!

ஸ்கந்தா பல்கலைக்கழக
மாணவர் அவை.
கன்னாகம்.
(93054)

## மதுபான முகவர்களுடனான
# கலந்துரையாடல்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகளின் விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் (08-10 2001) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மானிப்பாய்) தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உத்தரவு பெற்ற மதுபான விற்பனவு முகவர்கள் அனைவரையும் மேற்படி கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

- பொது முகாமையாளர்
வலிகாமம் ப. தெ. வ. அ கூ. சங்கம்
கொத்தணி, மானிப்பாய்.
(சி/18549)

# கேள்விப்பத்திர அறிவித்தல்

2001.09.26 ஆம் திகதிய உதயன் நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. யா/நெல்லியடி ம. ம. வி. ஆசிரிய பயிற்சி நிறுவன 20'x10' களஞ்சிய அறைக்கான வேலை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
2. வலயக் கல்வித்திணைக்களம், வடமராட்சி 90'x25' மூன்று மாடிக் கட்டட வேலைக்கான கேள்விச் சபை பதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் வடமராட்சி, வலயக் கல்வித் திணைக்களத்தில் 2001.10.18 ஆம் திகதி மு. ப. 10.30 மணிக்குக் கூடும்.

மேற்படி வேலைக்கான கேள்விப்பத்திரங்களை 2001.10.10 ஆம் திகதி முற்பகல் 12.00 மணி வரை வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களப் பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பதில் மேலதிக மாகாணக்
கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.
(சி/18545)

# கண்ணீர் அஞ்சலி

தேசிய சர்வோதய சிரமதான சங்க யாழ். மாவட்ட ஆரம்பகால சேவையாளரும் தற்போதைய வட இலங்கை சர்வோதய பொருளாளருமான

**கந்தையா திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

தேசிய சர்வோதய சிரமதான சங்கம்,
தேசிய யாழ். மாவட்டக் கிளை,
சுண்டுக்குளி.
((93057) தலைமையகம் - மொறட்டுவ.

## சொற்பொழிவு

''ஜீவன் பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியம்'' என்னும் தலைப்பில் வைத்திய கலாநிதி சின்னப்புவின் சொற்பொழிவு இன்று பிற்பகல் 2 மணி முதல் உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம் பெறும். (க-3)

## மெய்வல்லுநர் போட்டி

கரணவாய் செல்வபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தின் 29ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வன்மைப் போட்டியும் நிலையத் தலைவர் கு. மகாலிங்கம் தலைமையில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நெல்லியடி அமைப்பாளர் ப. இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

மரதன் ஓட்டம், கரபந் தாட்டம், இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் என்பன நடைபெறும். (க-11)

## மாதகல் வாசியை காணவில்லை

மாதகல் பகுதியைச் சேர்ந்த மனநோயாளியெனக் கூறப்படும் வயோதிபர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவிலில் வசித்து வருகின்ற தனது மகனிடம் கடந்த மாதம் 29 ஆம் திகதி சென்ற இவர் அங்கு தங்கியிருந்த சமயம் மறுநாள் 30 ஆம் திகதி தொடக்கம் காணாமற் போய்விட்டதாக உறவினர்களால் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதகலைச் சேர்ந்த ஐயன் செல்லன் (வயது 65) என்பவரே இவ்வாறு காணாமற் போனவராவார். (க-10)

## விளையாட்டு விழா

வட்டுகிழக்கு திரட்டிப் பனை அறிவொளி சனசமூக நிலையத்தின் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் வே. சிவலிங்கம் தலைமையில் நிலைய முன்றிலில்இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன், வலி. மேற்கு பிரதேச செயலர் க குணராசா மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவனேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-29)

## ஆண்டு விழா

யாழ்.மறைமாவட்டமரியாயின் சேனையின் 80 ஆவது ஆண்டு விழாவும், குருநகர் புனித யாகப்பர் ஆலயமரியாயின் சேனையின் 63 ஆவது ஆண்டுவிழாவும் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு குருநகர்புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும்.

காலை 7 மணிக்கு நன்றித் திருப்பலி குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஏ. எவ். ஜெயசேகரம் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து யாகப்பர் ஆலய மண்டபத்தில் உபசரிப்பு நிகழ்வும் இடம்பெறும். (க-51

## நன்றி செலுத்தும் வழிபாடு நாளை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையின் பிரார்த்தனை மண்டபத்தின் 6ஆம் வருட நன்றி செலுத்தும் வழிபாடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அருட்செல்வி ஜே. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (க-3)

## எமது உளம் கனிந்த பாராட்டுகள்

எமது மதிப்பிற்குரிய
வைத்திலிங்கம் கனகசபை
தம்பதிகளின் ஏக புத்திரன்

**திரு. க. சுதாகரன்**

அவர்கள் 06-10-2001 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் முகாமைத்துவப் பட்டத்தைப் பெறுவதையிட்டு மனமார வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெறப் பாராட்டுகின்றோம்.

க. கோபாலபிள்ளை குடும்பத்தினர்
(சுணக்காளர்/ பதில் பொது முகாமையாளர்,
நெடுந்தீவு ப.நோ. கூ. சங்கம்)
முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு. (93064)

## இணுவில் திருவூர் பெருமை கொள்கிறது

எமது ஊர் மைந்தர்கள்
பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற
பேராசிரியர் சபா. ஜெயராசா
(யாழ் பல்கலைக் கழகம்)
''கலாநிதி'' பட்டம் பெறும்
கலாநிதி தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம்
(ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி)
''முதுதத்துவமாணி'' பட்டம் பெறும்
திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை)
திரு. கந்தையா ஸ்ரீகணேசன்
(விரிவுரையாளர், வவுனியா வளாகம்)
நிர்வாகத்துறையில் உயர் பட்டம் பெறும்
திரு. அம்பலவாணர் குகதாசன்
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)
ஆகியோரைப் பெருமையோடு வாழ்த்துகின்றோம்.

செ. இலகுநாதன்
தலைவர்,
இணுவில் கிராம முன்னேற்றச் சங்கம்.
(93067)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் சேவையாற்றி வருகின்ற ஆசிரியப்பணியில் வெள்ளிவிழாக் கண்டவர்களும், ஆசிரியர் சேவை தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றவர்களுமான

உப அதிபர்
**திரு. கா. குமாரவேலு** SLTS - 1 Sp.Tr.Eng.
சிரேஷ்ட ஆசிரியர் **செல்வி அ. வைரமுத்து** BSc. Dip. in Ed. SLTS - I

ஆகியோரை மேலும் பல உயர்வுகள் பெற்றுச் சிறப்படைய வேண்டும் என இந்நாளில் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்,

ஆசிரியர்கள்,
கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.
காரைநகர். (சி/18555)

# கண்ணீர் அஞ்சலி

தீவக மாதாவின் அருந்தவப் புதல்வனும் வட பிரதேச சர்வோதய அமைப்பாளரும் சப்த தீவுகளின் தன்னலமற்ற சமய, சமூகத் தொண்டனுமாகிய

சர்வோதயம்
**கந்தையா திருநாவுக்கரசு**

அவர்களின் சிரிய வாழ்வு அஸ்தமனமானதையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்கி, அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

பிரதேச செயலகம்,
தீவுகள் தெற்கு, வேலணை.
(93042)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

05 - 10 - 2001 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் என்னால் அறிவிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 2 ஆவது கேள்வி அறிவித்தலாகிய யா/ முத்துதம்பி மகாவித்தியாலயத்தின் (பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) கூரைவேலை திருத்தம் பற்றிய கேள்வி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
(சி/18551)

உதயன்

## ஆசான்களைப் போற்றும் ஆசிரிய தினம்

இன்று அனைத்துலக ஆசிரியர் தினம்.

ஆசிரியத் தொழிலின் மேன்மையையும் புனிதத்தையும் மதிக்கும் பொருட்டும் அந்தப் பரிசுத்த வேள்வியை மகிமைப்படுத்தும் நோக்குடனும் அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் இலக்குடனும் அனைத்துலக ரீதியாக இந்தநாள் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றது.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்ற கொள்கையுடன் வாழும் நமது தமிழ்ச் சமுதாயம், 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற ஒழுங்கிலே பெற்றோருக்கும் தெய்வத்துக்கும் இடையிலே உயர்ந்த இடத்தில் வைத்து ஆசிரியர்களைப் போற்றுகின்றது.

அறிவொளி தரும் ஆசானே ஒருவனின் வாழ்க்கைக்கு வழிகாட்டி.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். அந்த இளமைக் கல்வியைச் செவ்வனே வழங்கும் ஆசிரியனை நமது சமூகம் தெய்வமாக மதித்து வந்ததில் வியப்பேதுமில்லை.

அந்தத் தெய்வங்களை உளமார இருத்தி அவர்களை கௌரவிக்கும் - போற்றும் - நிகழ்வு நமது பாடசாலைகள் எங்ஙனும் இன்று பரந்துபட்டு நடைபெறுகின்றது.

ஒரு வகையில் இது நன்றியறிதலை வெளிப்படுத்தும் நிகழ்வும் கூட.

தானங்களில் சிறந்த வித்தியாதானத்தை அள்ளி வழங்குகின்ற ஆசிரியனை நமது சமூகம் காலங்காலமாக மதித்தே வந்துள்ளது. ஆசிரியனைக் குருவாகவும் மாணவனை சிஷ்யனாகவும் நமது பழந் தலைமுறை கண்டது.

ஆனால் அந்த நிலைமை இன்று மாறிவிட்டது.

ஆசிரியனுக்குப் பணிந்து, மதித்து நடக்கும் சிஷ்யர்கள் இன்று குறைந்து வருகின்றார்கள். மாணவனுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய ஆசிரியர்களின் நிலைகூட கீழிறங்கத் தொடங்கிவிட்டது.

மொத்தத்தில் ஆசிரியர் - மாணவர் உறவு நலிந்து போகும் நிலைமை. உண்மையான அர்ப்பணிப்புடன் - மாணவர் நலனில் அதிக அக்கறையுடன் - தமது பணியைத் தவமாக இயற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அருகிக் கொண்டே போகின்றது. கல்வியை விற்பனைப் பொருளாக - வர்த்தக சேவையாக - மாற்றியதன் விளைவு இது. வருமானம் தரும் 'பிஸனெஸ்' ஆக கல்விப் போதனை மாறியதால் அர்ப்பணிப்பும், மகத்துவமும், கௌரவமும் காணாமல் போய்விட்டன. வர்த்தக நிறுவனத்தின் விற்பனைப் பிரதிபோன்று கருதப்படும் நிலைக்கு புனிதப் பணி புரியும் ஆசிரியனின் நிலைமை தாழ்ந்து போயிற்று.

இன்று நடைபெறும் ஆசிரிய தினக் கொண்டாட்டங்களும் அதன் அர்த்தங்களும் இந்த கீழ் நிலைமையிலிருந்து ஆசிரியப்பணியை உயர்த்தி, அதற்கேயுரிய உயர் நிலையில் அதை நமது சமூகம் மதித்துப் பேண வழி செய்ய வேண்டும்.

இன்றைய அனைத்துலக ஆசிரிய நாள் ஆசிரியர்களுக்குரிய மதிப்பையும், கௌரவத்தையும், உரிமைகளையும் உறுதிப்படுத்தும் நாளாக அமைவதோடு அவர்களுக்குள்ள சமூகப் பொறுப்பையும் கடப்பாட்டையும் கூட நினைவூட்டிச் செயற்படுத்தும் நாளாகவும் அமைய வேண்டும்.

எண்ணும் எழுத்தும் கண் என்றால் அதை ஊட்டும் ஆசிரியர்கள் அந்தக் கண்ணுக்கு ஒளி கொடுக்கும் கடவுளர்கள் அல்லவா?

அந்தக் கடவுளரைப் போற்றும் இந்தத் திருநாளில் ஆசிரியர்களை மதிக்கவும் போற்றவும் நமது மாணவர்களும் சமூகமும் திடசங்கற்பம் பூண்டு கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படுவதும், மாணவர்கள் அந்த ஆசிரியர்களின் மதிப்பை உணர்ந்து பணிந்து பயன்பெறுவதும் நல்ல ஆசிரிய - மாணவ உறவை மேம்படுத்தும்.

அப்படி மேம்படும் நிலை ஏற்பட்டால் -

நல்மாணாக்கர்கள் உருவாவார்கள்; சீரிய சமூகம் தோற்றுவிக்கப்படும்; அன்பும், பண்பும், அமைதியும், அறநெறியும், நீதியும் துலங்கும் சமுதாயம் உயிர்வாழும். அதற்காக இன்று பிரதிக்ஞை செய்வோம்.

# படம் பார், பாடம் படி

படங்கள் வெளிவந்தால் – தமிழ்ப் படங்களைத்தான் சொல்லுகிறேன் – அவைகளைச் 'சுடச்சுடப்' பார்த்துவிட வேண்டும் என்ற ஆர்வம் ஆர்வலர்கள் மத்தியிலே இருப்பதுண்டு. அதற்கேற்ற வசதி வாய்ப்புக்களும் இப்பொழுது வந்து விட்டன. மினி சினிமாக்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், 'பீஸ்' எடுத்து 'டெக்கில்' போட்டுப் பார்க்கின்ற... இப்படிப் பல...

ஆனால், அப்பொழுதெல்லாம் திரையரங்குகளை விட்டால் வேறு வழியில்லை. இலங்கையிலே திரைப்பட இறக்குமதியாளர்கள் என்று சினிமாஸ் லிமிட்டெற், சிலோன் தியேட்டர்ஸ் போன்ற நிறுவனங்கள் இருந்தன. அவைகளுக்கென்று கொழும்பிலே மட்டுமன்றி நாடு முழுவதும் தனித்தனியாக திரையரங்குகளும் இருந்தன. ஒரு திரைப்படத்தை எந்த நிறுவனம் இறக்குமதி செய்ததோ, அந்த நிறுவனத்துக்குரிய திரையரங்குகளில்தான் அப்படம் ஓடமுடியும். முதற் சுற்றில் முக்கிய நகரங்களிலுள்ள அவர்களது இந்தாறு திரையரங்குகளுக்குத்தான் இந்த வாய்ப்புக் கிடைக்கும். ஏனைய திரையரங்குகளுக்கு அடுத்தடுத்த வாய்ப்புகள்தான்.

எக்காரணம் கொண்டும் ஓர் இறக்குமதியாளரின் படத்தை இன்னொரு இறக்குமதியாளருக்குரிய திரையரங்குகளில் பார்க்க முடியாது... ஐயாவின் நோயாளர்களை அம்மா பார்க்கமாட்டார், அம்மாவின் நோயாளர்களை ஐயா பார்க்க மாட்டார்... என்பது போல என வைத்துக்கொள்ளுங்களேன்....

நகரத்திலேயுள்ள ஒரு திரையரங்கில் ஒரு படம் புதிதாகத் திரையிடப்படுகிறது என்றால், அங்கு திருவிழாக்கூட்டம்தான். யார் முந்திச் சென்று 'படம் பப்படமாகு முன்னர்' அதனைப் பார்ப்பது என்பதில் நகர மக்கள் மட்டுமல்ல கிராம மக்களும் அங்கு அலைமோதுவார்கள். அப்படி ஒருவர் பார்த்துவிட்டு வந்தால் அவர் 'மனிதருள் மாணிக்கம்' என்றுதான் மற்றவர்களால் மதிக்கப்படுவார். அவரை 'எப்படிப் படம்?' என்று கேட்பதைவிட 'எப்படிப் பார்த்தீர்கள்?' என்று அந்தச் சாதனையைப் பற்றித்தான் கேட்பார்கள். இப்படிப் படம் பார்த்த சிலர் மீண்டும் அப்படித் திரையரங்கினுள் புகுந்து பக்கத்திலிருப்பவர்களுக்கு, ஓடிக் கொண்டிருக்கும் படத்தைப் பற்றித் 'தீர்க்க தரிசனம்' சொல்லப்போய்.... பாராட்டுப் பெறுவதுமுண்டு... வாங்கிக் கட்டு வதுமுண்டு...

படத்தைப் புதிதாகவே பார்த்துவிட வேண்டும் என அலைமோதிய இரசிகர்களைச் சமாளிப்பதற்காக அப்பொழுது ஓர் அதிசயம்கூட நடந்திருக்கிறது. யாழ்ப்பாணத்திலே நான் முன்னர் குறிப்பிட்ட ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமாக இரண்டு திரையரங்குகள் இருந்தன. அந்த இரண்டிலுமே ஒரு புதுப்படம் ஓடியிருக்கிறது.



அதாவது இரண்டு பிரதிகளைக் கொண்டல்ல, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல...

'ஒரு திடப் பொருளானது திரவத்தில் மூழ்கும்போது...' என மாணவர்கள் 'ஆர்க்கிமிடிஸ்' தத்துவத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதைப்போலச் சொல்லுகிறேன்... ஒரு திரையரங்குக்கு இரண்டு படம் காட்டும் கருவிகள் (புறஜெக்டர்ஸ்) அவசியம் இருக்கவேண்டும். ஒரு படம் என்பது பல படச் சுருள்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். ஒரு புறஜெக்டரில் முதல் சுருள் ஓடி முடிந்ததும், அடுத்து புறஜெக்டரில் இரண்டாவது சுருளை ஓடவிடுவார்கள். இப்படி மாறி மாறி ஓடும்போது தான் திரையில் தொடர்ச்சியான படம் விழுகிறது.

மேலே குறிப்பிட்ட ஒரு திரையரங்கில் பிற்பகல் காட்சி இரண்டு மணிக்கு என்றும் அடுத்த திரையங்கில் இரண்டரை மணிக்கு என்பது போலவும் விளம்பரம் செய்தார்கள். முதல் அரங்கில் படத்தின் முதற் சுருள் ஓடி முடிந்து, அடுத்த சுருள் ஓடிக்கொண்டிருக்கும். அச்சமயம் புறஜெக்டரிலிருந்து கழற்றி முதல் சுருளை திருப்பிச் சுற்றிக்கொண்டு படுவேகத்தில் அடுத்த திரையரங்குக்குக் கொண்டுபோய், அந்தப் புறஜெக்டரில் பொருத்தி ஓடவிடுவார்கள். அதே போல அங்கு இரண்டாவது சுருளும் ஓடிமுடிந்து அடுத்த ஓட்டத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்கும்....

இப்படியாக நாடெங்கிலும் சுற்றி வருகின்ற ஒரு படப் பிரதி ஒரு திரையரங்குக்கு இரண்டாவது தடவையும் வருகின்றதென்றால் அப்போது அதற்கு நுழைவுக்கட்டணம் அரைவாசிதான். அதாவது கலரிக்கு 65 சதத்துக்குப் பதில் 35 சதம் தான்!

போயும் போயும் கலரிப் புத்தியா என்று கேட்கிறீர்களா? 'வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி'ப் பணம் சேகரித்துப் படம் பார்ப்பவர்கள் 'பல்கனியில்' இருந்தா பார்க்க முடியும்? தவிரவும் அப்பொழுதெல்லாம் கலரியைக் குறைத்து மதிப்பிடுவதில்லை. சுவரொட்டி விளம்பரங்களில் கூட கலரிக்கு 'இவ்வளவு' என்று அதைத்தான் பெரிதுபடுத்திக் காட்டுவார்கள். பெரிய இடத்துப் பையன்கள்கூட அதற்குப் போவதுண்டு. இது மட்டுமா?

கலரி என்றால்தானே முன்னுக்கு இருந்து படம் பார்க்க முடியும்? அங்கு இல்லை என்றதும் மேலும் இரண்டு மூன்று வரிசைகளுக்கு வாங்குகள் கொண்டுவந்து போட்டு இன்னும் இன்னும் திரைக்கு முன்னால் இருக்க வாய்ப்புத்தருவார்கள். அதாவது எமது அபிமான நடிக நடிகைகளை மிகவும் கிட்ட இருந்து பார்க்கின்ற வாய்ப்பு... கோடம்பாக்கம் வீதிகளில் நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு நின்றாலும் கிடைக்குமா இந்த அரிய வாய்ப்பு? அதிகம் ஏன், நா(ன்)ம் நினைத்தால் கன்னடத்துப் பைங்கிளிகளையும் கவர்ச்சிக் கன்னிகளையும் தொட்டுக் கூட பார்த்திருக்கலாம். ஆனால்....

அப்போது நா(ன்)ம் அப்படி நினைத்ததில்லை....

-சுண் அங்கிள்.

# நல்லூர் பிரதேச செயலகத்தின் இடம்பெயர் சேவை 11ஆம் திகதி!

### பிரச்சினைகளைக் கடிதம் மூலம் கையளிக்கலாம்

கோண்டாவில்,ஒக்.6

நல்லூர் பிரதேச செயலக இடம் பெயர் சேவை எதிர்வரும் 11ஆம் திகதி நல்லூர் மூத்தவிநாயகர் சன சமூக நிலையத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த இடம் பெயர் சேவையில் பல்வேறு திணைக்களங்களும் பங்கேற்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவுகளான ஜே 91, ஜே 94, ஜே 95, ஜே 106, ஜே 107, ஜே 108, ஜே 109, ஜே 112, ஜே 113 ஆகியவற்றைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர் சேவையில் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்தச் சேவையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வசதியாக முன்னேற்பாடாக தமது பிரச்சினைகளைக் கடிதம் மூலம் கிராம அலுவலர்களுக்கு அல்லது பிரதேச செயலகத்தில் கையளித்தால் வசதியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-86)

### நாளை

புரட்டாதி 21
ஞாயிற்றுக்கிழமை
திதி:பஞ்சமி
முன்னிரவு 9.42 வரை
நட்சத்திரம் : ரோகிணி
பின்னிரவு 3.22 வரை
சுபநேரம்: 9.02 - 10.32
ராகுகாலம் : 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

### ப.நோ.கூ.சங்க கிளைகளில் மா தாராளம்!

அரியாலை,ஒக்.6

யாழ். குடாநாட்டில் கோதுமை மா ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாகப் பாவனையாளர்களுக்குத் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சமாசத்தால் தருவிக்கப்பட்ட மா குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. (க-17)

### உதயவாக்கு

கடன், நெருப்பு, பகை இவற்றில் மிச்சம் வைக்காதே. அவை மறுபடியும் கிளம்பி உன்னை அழிக்க முற்படும்.

# நாட்டு நடப்பு

கண்ணெனக் கல்வி தன்னை
கருத்துடன் பேணிக் காத்து
எண்ணத்தில் மூச்சில் எல்லாம்
இணையிலா அறிவை ஓச்சி
பண்புடன் பரிவு பொங்க
பணி செய்பவர் ஆசானன்றோ
மண்ணினில் உங்கள் நாமம்
மறையாது நிலைத்து வாழும்
வண்ணமார் தமிழர் நாங்கள்
வாழ்த்துறோம் வாழ்க நீவிர்!

*- விகடகவி.*

# அரசு – ஜே.வி.பி. உடன்பாடு குறித்து உலக வங்கி தீவிர பரிசீலனை

கொழும்பு,ஒக்.6

பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக உலகவங்கி தீவிர கவனம் செலுத்தி வருவதாக கொழும்பிலுள்ள உலக வங்கிப் பணிமனை அதிகாரிகள் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்த உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையான செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகளின் கடன்களை ரத்துச் செய்வது என்ற நிபந்தனை தொடர்பாக உலக வங்கி அதிருப்தியடைந்துள்ளதாகவும்-

இந்த உடன்படிக்கை தொடர்பாக உலக வங்கி தீவிர கவனம் செலுத்தி வருவதாக சிறிலங்காவுக்கான உலக வங்கிப் பணிப்பாளர் பார்ட் ஹோர்பக்ட கூறியிருப்பதாகவும் -

உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள விடயங்களில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பான விடயங்கள் குறித்து உலக வங்கி தீவிர கவனம் செலுத்திவருவதாகவும் -

'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

உலக வங்கியின் இந்த நிலைப்பாடு காரணமாக அரசுக்குக் கிடைக்கவுள்ள 13 கோடி அமெரிக்க டொலர் கடனுதவி பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ரயில்வே திணைகளம், இலங்கை மின்சாரசபை போன்ற முன்னணி அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் போது ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யவே இந்த 13 கோடி அமெரிக்க டொலர் கடனுதவியை உலக வங்கி அரசுக்கு வழங்கச் சம்மதித்திருந்தது.

(ஐ)

# அமைச்சுச் செயலாளரின் ஆசிரியர் தின வாழ்த்து

யாழ்ப்பாணம்,ஒக்.6

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சு.பரமேஸ்வரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

*"கற்றோர் முகத்திரண்டு கண்கள் கல்லாதோர் முகத்திரண்டு புண்கள்"* என்ற வள்ளுவனது கூற்றுக்கு அமைய இன்றைய இளஞ்சிறார்களை நாளைய தலைவர்களாக உருவாக்கும் கல்வி என்னும் கடலில் ஆசிரியர் என்ற படகோட்டி மிகவும் இன்றியமையாதவர்.

அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை ஊட்டும் பெருந்தகைகளை நினைவு கூரும் நன்னாள் இனிமையானது. *"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு"* என்ற பொய்யாமொழி புலவனின் கூற்றுக்கு அமைய நமது ஒவ்வொருவரதும் இன்றைய நிலைக்கும் மூலகாரணமாக அமைந்த ஆசிரியர்களை நினைவு கூருவது சிறந்ததே. அவர்களைப்போன்று வாழையடி வாழையாக வந்த இன்றைய ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக எமது வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பலவகையான இன்னல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து, எமது சிறார்களின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் ஒவ்வோர் ஆசிரியர்களினது சேவைகளை மனதாரப் பாராட்டுகின்றேன்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்ற வகையில் இன்றைய நன்னாளில் எமது ஆசிரியர்களுக்கு நிறைந்த மனப்பலத்தையும் உடற்பலத்தையும், செயற்றிறனையும் எல்லாம் வல்ல இறைவன் அருளவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

### பணியாளர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.6

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இப்பரீட்சைகளில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-10-72)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




யாழ்ப்பாணத்தில் காணப்படும் மிதிவெடிகளில் ஒருவகை.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம் புதிய VCD PLAYER 2000W (PMPO -MODEL NO MHC -VX33) உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 253, பலாலி வீதி, கந்தர்மடம். (92955)

போட் பிறிபேட் கார் OVER HEAD VALVE, 230 DISEL BENZ கார் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42/1A, கல்லூரி வீதி, நீராவி யடி, யாழ்ப்பாணம். (93024)

45 நாள்கள் நிரம்பிய வெள்ளை நிற பொமேரியன் ஆண் நாய்க் குட்டிகளும் 1 1/2 வயது நிரம்பிய வெள்ளை - கறுப்பு நரை ஆண் நாய்களும் விற்பனைக்கு உண்டு. க.நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டா வில். (93028)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பெண்களுக்கான பெற்றோல் மீற் றர் சாளி (புதிய மொடல்) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 34/7, செட்டித் தெரு, நல்லூர். (93031)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின Dachound நாய்க்குட்டிகள விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங் கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத் திரைச் சந்தையடி, நல்லூர். (92889)

## ஊசி மருந்து விற்பனைக்கு

நாய்களுக்குரிய Parvo, Distember ஊசி மருந்துகள் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (92890)

## வீடும் காணியும் விற்பனைக்கு

இலக்கம் 9, டேவிட் வீதியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட மாடி வீடும், வெறும் காணியும் (51/2 பரப்பு) விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியில் இருந்து 100 யார் தூரம். தொடர்பு: P.E.இராசையா, C32 2/1, சொய்சாபுர மாடி வீடு, மொரட்டுவ. T.P.605761. (C/18515)

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழி கள் பாதிக்கோழி உட்பட சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத் தம் செய்யப்பட்டது 1Kg 220/- மட் டுமே! தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (93022)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிறா இன புறொயிலர் குஞ்சு களும், சமீறா இனச் சிவப்பு, கறுப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 343, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்; 1014, கே.கே. எஸ். வீதி (பெரியபுலம் பாடசாலை முன்பாக), யாழ்ப்பாணம். T.P:3353 (93037)

## SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலத்தில் எழுத, வடிசிக்க, இலக்கணம் கதைக்கப் பயில. தபால் மூலமும். ந.விக்னேஸ் வரன் ஆச்சாரி CER/Dip. in M.L.S. (LONDON), 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (92991)

## தவறிவிட்டது

ஈவினை, கொலனிப் பிரிவைச் சேர்ந்த சின்னையா புவனேந்திரன் என்பவரது விசேட அ.அட்டை (இல. 0906030929) அச்சுவேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் J/209 கிராமசேவையாளரிடம் ஒப் படைத்துதவவும். (C/18535)

சுண்டுக்குளி மகளிர் பாடசாலை மாணவியான கவிதா பாலச்சந்திரன் என்பவருடைய பாடசாலைப் புத்த கங்களடங்கிய பாக்(Bag) கஸ்தூரி யார் வீதிக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி பாடசாலையில் ஒப்படைத்துதவவும். (93032)

## இலகு திருமண சேவை

1958, பரணி, அரச உத்தியோக, விவாகரத்துப்பெற்ற மணப்பெண்ணுக்கு நகைத் தொழிலில் ஈடுபாடுடைய மண மகன் (அரச/தனியார் துறையில்) தேவை. மணமக்கள் தேர்வுக்கு நாடுங் கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயி லடி, யாழ்ப்பாணம். (93014)

## இறைச்சிக் கோழிகள் தேவை

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு:- க.தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (முத்திரைச் சந்தையடி) நல்லூர். (92968)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச ஊழியர்களுக்கு (1951 BANK), (1959 விரிவுரையாளர்), (1967, 1972 பொறியியலாளர்), (1967 ஆசிரியர்), (1970 டாக்டர்) அழகிய, படித்த மணமகள்கள் தேவை. கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (93023)

## செய்முறைப் பரீட்சை

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாண வர்களில் விவசாயம், மனைப்பொரு ளியல் ஆகிய பாடங்களுக்குத் தோற றும் மாணவர்களுக்கான செய் முறைப் பரீட்சை இன்று சனிக்கிழமை யார்க்கரு விநாயகர் ஆலய மண்ட பத்தில் இயங்கும் வித்தியாலயத்தில் நடைபெறுமென அதிபர் இ.சிவானந் தம் அறிவித்துள்ளார். (ஐ-117)

---

உ

## தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
## தொல்புரம், சுழிபுரம்

### முன்மண்டப பெருந்தீராந்திகள், ஓடுகள், மரங்கள், கற்தூண்கள், கொங்கிறீற் கற்கள் விற்பனை

எமது தேவஸ்தான முன்மண்டபம் அகற்றப்பட்டு புதிய மணி மண்டபம் விரைவில் அமைக்கப்படவிருப்பதனால், மேலே கூறப்பட்டுள்ள பொருள்கள் விற்பனைக்கு வருகின் றன. இவற்றை நேரில் பார்வையிட்டு, மதிப்பீடு செய்து, தாங்கள் செலுத்தவிருக்கும் விலை விவரத்தை, தேவஸ் தான செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களை தேவஸ்தானத்துள் இருக்கும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

துரைசிங்கம் ரகு
*செயலாளர்,*
*ஆலய பரிபாலன சபை.*

*வழக்கம்பரை,*
*சுழிபுரம்.* (93017)

---

## பகலவன் போல் நிலைத்து வாழி!

பணிகள் பல உண்டுலகில்
பார்ப்பவரும் பலபேர் உண்டு
அணியென நாட்டை நன்கு
அலங்கரிப்பவர் ஆசிரியரன்றோ
கனிந்திட வார்த்தை பேசி
களிப்புடன் கல்வி நல்கி
பணிவுடன் தொண்டு ஆற்றும்
பண்பது மிக்கோர் நீரே!
இணையில்லா உமது தொண்டுக்கு
ஈடுதான் உலகில் உண்டோ?
பணிந்தே உம்பாதம் போற்றுகின்றோம்
பகலவன் போல் நிலைத்து வாழி!

ஆசிரியர்களுக்கு வாழ்த்தினை அள்ளிச் சொரியும்:

**சிவகணேசன் ஜுவலரி நிறுவனம்**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (C/18534)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யா/ஸ்ரீ.ல.சு.கட்சி செயற்குழு உறுப்பினர் R.P.ஜெயதாஸ் தம்பதியினரின் அருந்தவப்புதல்வன்



செல்வன்
**தியூசியஸ் தனேஷ்** அவர்கள்

5ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமைக்கு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக் குக் கல்வியறிவு புகட்டிய யாழ்.புனித ஜோண் பொஸ்கோ அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின் றோம்.

*183, முதலாம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (93019)

நிர்வாகம்,
ஸ்ரீலங்கா சு.கட்சி,
யாழ்.மாவட்டம்.

---

## வாழ்க! வளர்க!

செல்வி இ. நிரோஜா - 130 புள்ளிகள்
செல்வி இ. ஜதீபா - 124 புள்ளிகள்

இவ்வாண்டில் புலமைப்பரிசிற் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மேற்படி இரு மாணவிகளையும், வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளி பெற்ற மாணவி **ஸ்ரீ. நிலானியையும்** அயராது அரும்பணி செய்து 17 வீதம் சித்திபெற வைத்த வகுப்பாசிரியரையும், உதவியளித்த மற்றும் ஆசிரியர்களையும், பெற்றோரையும், டெல்ரா பயிற்சி வினாத்தாளின் ஆசி ரியரையும், முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாகத் திகழும் தரஉயர்வுபெற்ற அதிபரையும், கோட்ட, வலய மட்டங்களில் ஆங்கிலதின எழுத்துப் போட்டியில் **செல்வி இ. நிரோஜா** இரண்டாம் இடம் பெற்றமைக்கு ஊக்க மளித்த ஆங்கில ஆசிரியரையும் பாராட்டுவதுடன், அவர்களின் நற்சேவை களையும் பாடசாலையின் உண்மையான வளர்ச்சியையும் கருதி பல்லாண்டு வாழ்க, வளர்க என இன்றைய உலக ஆசிரியர் தினத்தையும் முன்னிட்டு உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யா/கோட்டைக்காடு அ.த.க.பா., சுன்னாகம்.

பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள். (93012)

---

## வாழ்த்துகிறோம்



இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில்
முதுதத்துவமாணிப் பட்டம்பெறும்
அருட்கவி **சீ.விநாசித்தம்பி** ஐயா
அவர்களையும்
*கல்வியியல் டிப்ளோமா பட்டம்பெறும்*
சைவப்புலவர்



**செ.கந்தசத்தியதாசன்** B.A.(Hons)
(ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)
அவர்களையும்
*இந்நன்னாளில் வாழ்த்துகிறோம்!*

(802) - மாவை. சிவநாதம் பட்டிமன்றக் குழு.

---

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை முன்னாள் அதிபர்
**திருமதி தேவமலர் அரியரட்ணம்**

அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்வதோடு, அமரருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்தி, அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (C/18538)

---



## வாழ்த்துகின்றோம்

இன்று (06-10-2001) சனிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் B.Com.(m.m.spl.)
என்னும் பட்டத்தைப் பெறும் எமது
அளவையியல்
ஆசிரியர் **திரு.N.சுரேஸ்** B.Com.(m.m.spl.)
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(93013) குப்பிளான் மாணவர்கள்.

---

## எமது உளங்கனிந்த பாராட்டுக்கள்



'ராகம்ஸ்' இசைக்குழுக் கலைஞரும்,
யாழ். சென்றலைட்ஸ் கழக கிரிக்கெற் வீரரும்,
யாழ். 2 ஆம் குறுக்கைச் சேர்ந்தவருமான
**மயில்வாகனம் பேனாட் ரமேஷ்**
இன்று பட்டமளிப்பு விழாவில் பொதுக்கலைமாணி (B.A.) பட்டம் பெறுவதையிட்டு அவரை உளமார வாழ்த்துகிறோம்.

நல்லூர். - 'ராகம்ஸ்' இசைக்குழு. (92985)

---

## நெஞ்சகலா நினைவில்
## முதலாவது வருட சிரார்த்த நாள் நினைவஞ்சலி



செல்வன்
**இராசையா ஜீவகரன்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1987.09.05 | 2000.10.06 |

திதி: புரட்டாதி பூர்வபக்க நவமி
சிரார்த்த நாள்: 04-10-2001

எம்முயிரே ஜீவகரா, நீயுதிர்க்கும் அமுதமொழி
என்றென்றும் இதயத்து இடையறா தொலிக்குதையா!
அம்பொன் னுலகத்து இன்பநுகர் நின்முகத்து
அழகதனை நாம்காண அருங்கனவில் வாராயோ?

*கொல்லோலை வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி* (92804)

*உமது பிரிவால் துயர்றும்கும்:*
தாய், தந்தை, சகோதரியரும்,
அம்மம்மாமாரும்.

# மானிப்பாய் வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு

நவாலி,ஒக்.6

கடந்த 1995ஆம் ஆண்டு இடம் பெற்ற அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மானிப்பாய்ப் பகுதி வர்த்தகர்களுக்கு நஷ்டஈடும் வங்கிக் கடனும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் நஷ்டஈடு சம்பந்தமான விண்ணப்பங்கள் கடந்த 99ம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டு எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், சில தினங்களுக்கு முன்னர் மானிப்பாய் வர்த்தக சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக நஷ்டஈடும் வங்கிக் கடனும் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது - எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் வர்த்தகர்களின் சொந்தக் கட்டடங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் - முன்பு விண்ணப்பிக்காதவர்கள் தற்பொழுது உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கடன், நஷ்டஈடு ஆகியவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களை சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் அதன் தலைவர் ப. சிவகுமார் அறிவித்துள்ளார். (க-100)

# சண்டிலிப்பாயில் கலாசார விழா

சண்டிலிப்பாய்,ஒக்.6

சண்டிலிப்பாய் (வலி.தென்மேற்கு) பிரதேச செயலகம் நடத்தும் கலாசார விழா இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாயிலுள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை நடைபெறும் விழாவில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்வார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் கௌரவ விருந்தினராக முன்னாள் பிரதேச செயலர் கா.சந்திரராசாவும் கலந்துகொள்வர். இருநாள் விழாவிலும் நாடகங்கள், நாட்டுக்கூத்து, சிந்து நடைக்கூத்து, நாட்டிய நாடகம், தனி நடனம், இசை நாடகம், கவியரங்கம், பட்டிமன்றம், கதம்பம் ஆகியன உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ஐ-135)

# ஆயிரத்து 528 பேர் இன்று பட்டங்கள் பெறுகின்றனர்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.பல்கலைக்கழகத்தின் 20 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று நடைபெறுகின்றது.

ஐந்து அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த விழாவில் மொத்தம் ஆயிரத்து 528 பேர் பல்வேறு பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாவது அமர்வு காலை 10.30மணிக்கும், மூன்றாவது அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும், நான்காவது அமர்வு பிற்பகல் 1.30 மணிக்கும், ஐந்தாவது அமர்வு பிற்பகல் 3 மணிக்கும் ஆரம்பமாகும்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறவுள்ளோரின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

☆ கௌரவ கலாநிதி - 4பேர்
☆ கலாநிதி - 4பேர்
☆ முதுமெய்யியல்மாணி - 11பேர்
☆ பொது நிர்வாக பட்டப்பின் தகைமை - 105பேர்
☆ கல்வியியல் பட்டப்பின் தகைமை - 19பேர்
☆ கலைமாணி - 383பேர்
☆ நுண்கலைமாணி (சங்கீதம்) - 9பேர்
☆ நுண்கலைமாணி (நடனம்) - 5பேர்
☆ தொழில் நிர்வாகமாணி - 100 பேர்
☆ வணிகமாணி - 156பேர்
☆ மருத்துவ சத்திரசிகிச்சை மாணி - 63பேர்
☆ விவசாய விஞ்ஞானமாணி - 11பேர்
☆ விஞ்ஞானமாணி - 146பேர்
☆ சித்தமருத்துவ சத்திரசிகிச்சை மாணி - 12பேர்
☆ விஞ்ஞான தகைமைச் சான்றிதழ் - 2பேர்
☆ இசைக்கலைமணி - 20பேர்
☆ நடனக்கலைமணி - 29பேர்
☆ உடற்கல்வியியல் தகைமைச் சான்றிதழ் - 51பேர்
☆ மீன்பிடியியல் டிப்ளோமா - 41 பேர்

**வெளிவாரி**

☆ கலைமாணி - 310பேர்
☆ நுண்கலைமாணி (சங்கீதம்) - 7பேர்
☆ நுண்கலைமாணி (நடனம்) - 6பேர்
☆ வணிகமாணி - 34பேர்

**கௌரவ பட்டங்கள்**

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதல் அமர்வில் இந்தியா, தமிழ்நாட்டைச் சேர்ந்த உயர் நீதிமன்ற சட்டத்தரணியான சேக்கிழார் அடிப்பொடி தில்லை ஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரனுக்கு இலக்கியக் கலாநிதி எனும் கௌரவப் பட்டம் வழங்கப்படவுள்ளது. கலாநிதிப் பட்டம் மயில்வாகனம் இரகுநாதனுக்கும், முதுமெய்யியல் மாணிப் பட்டம் கந்தையா ஸ்ரீகணேஷன், செல்வி மனோன்மணி கந்தையா ஆகியோருக்கும் வழங்கப்படவுள்ளன.

இரண்டாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கந்தையா குணரத்தினத்துக்கு விஞ்ஞானக் கலாநிதி எனும் கௌரவப் பட்டம் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதனுக்கு கலாநிதிப் பட்டமும், திருநாவுக்கரசு வேல்நம்பி, திருமதி ஜெயலஷ்மி இராசநாயகம் ஆகியோருக்கு முதுமெய்யியல் மாணிப் பட்டமும் வழங்கப்படவுள்ளன.

மூன்றாவது அமர்வில் பண்டிதர் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம் அவர்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது. கலாநிதிப் பட்டம் தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கும், முதுமெய்யியல்மாணிப் பட்டம் செல்வி ஜெயராணி நாகலிங்கம், ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோருக்கும் வழங்கப்படும்.

நான்காவது அமர்வில் அருட்கவி சீனியர் விநாசித்தம்பி அவர்களுக்கு கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கப்படவுள்ளது. சின்னத்தம்பி பத்மலிங்கம், செல்வி ஜெயரஞ்சினி இராஜதுரை, இரட்ணம் இரவீந்திரநாதன் ஆகியோருக்கு முதுமெய்யியல் மாணிப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

ஐந்தாவது இறுதி அமர்வில் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமாருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது. நடராஜா சுந்தரமூர்த்தி, செல்வி ரதிதேவி மார்க்கண்டு ஆகியோருக்கு முதுமெய்யியல்மாணிப்பட்டம் வழங்கப்படும். (ஐ-10)

# அடிநிலை மக்களின் விழிகள் திறக்குமா?

மனிதன் தன்னைத்தானே உணராது இருப்பதுதான் மனிதசமுதாயத்தில் மிகப் பெரிய கொடுமை. இந்தக் கொடுமையை இன்று அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் இந்தச் சமுதாயத்தின் அடிநிலை மக்களாக இருக்கின்றார்கள். சோகம் சூழ்ந்த தமது வாழ்வின் அவலங்களை உணராதவர்களாக இவர்கள் தேக்கமுற்று இருளில் மூழ்கிக் கிடக்கின்றார்கள். இந்த மக்கள் தமது வாழ்வில் தோன்ற வேண்டிய அடிப்படை மாற்றங்களைப் பெற்று, வளர்ச்சிப் போக்கினை நோக்கி முன்னேறாது இருந்து வருகின்றனர். தற்பொழுது தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை மிகவும் உன்னதமானது எனக் கருதும் அறியாமை இவர்களிடத்தில் நிரம்பிக் காணப்படுகின்றது. இந்த அறியாமை காரணமாக இவர்கள் தமது வாழ்வு நிலையை ஒரு போதும் கேள்விக்குள்ளாக்குவதில்லை. வாழ்வினைக் கேள்விக்குள்ளாக்கும்போதுதான் மேலும் பல்வேறு வினாக்கள் இவர்கள் மத்தியில் இருந்து எழுந்து, அவற்றுக்கான விடையும் தெளிவும் வந்து பிறக்கும்.

> "தங்கள் வாழ்வினைக் கேள்விக்குள்ளாக்காத அடிமட்ட மக்கள் தமது நிலைமையைத் தாமே உணர்ந்து கொள்ளாதவாறு தடுத்து நிறுத்தும் சாதனங்கள் இன்று பெருகிக்கிடக்கின்றன..."

உயிர் வாழ்வதற்கு போதிய உணவுகள் தங்களுக்கு ஏன் கிடைப்பதில்லை?




மற்றையவர்கள் போல நல்ல உடைகளைத் தாங்கள் ஏன் உடுத்திக்கொள்ள முடியவில்லை?

வாழ்வுக்கு வசதியான இல்லங்களை அமைத்துக் கொள்ள இயலாது போனதற்கு என்ன காரணம்?

சுத்தம், சுகாதாரம், கல்வி முதலியன சார்ந்த பல்வேறு வினாக்களை இவ்வாறு வினவிக்கொண்டு செல்ல வேண்டும். இந்த வினாக்களுக்கான தெளிவான விடைகளை இந்த அடிநிலை மக்கள் கண்டறிவார்களேயானால் இந்த இழிநிலையான தமது வாழ்வினைத் தாமே மாற்றி அமைக்க முற்படுவார்கள்.

சமுதாயத்தின் அடிநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்கள் தமது நிலைமையைத் தாம் உணர்ந்து கொள்ளாதவாறு தடுத்து நிறுத்தும் சாதனங்கள் பெரிதும் இன்று பெருகிக் கிடக்கின்றன. ஓட்டைக் குடிசைகள் தோறும் ரீ.வியும், டெக்கும், ரேப்பும் ஆக்கிரமித்துக் கொண்டு தீமை விளைவிக்கின்றன. விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சியின் பேறாக கிடைத்துள்ள இந்தச் சாதனங்கள் திட்டமிட்டுச் செல்லிய முறையில் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப் படாது, இவர்களின் சீரழிவுக்குரிய பொழுதுபோக்குச் சாதனங்களாக மாத்திரம் பயன்படுகின்றன. மலினமான சினிமாப் பாடல்களை அலுக்காமல், சலிக்காமல் தொடர்ந்து பார்த்து இரசித்து பொருளையும், காலத்தையும் விரையம் செய்வதும், ஆபாசமான சினிமாப் பாடல்களைப் பாடி ஆடிக் காலம் கழிப்பதும் இவர்கள் வாழ்வாகிக் கிடக்கின்றது. நிஜ வாழ்வில் அனுபவிப்பதற்குக் கிட்டாத சுகபோகங்களைச் சினிமா என்னும் ஊடகத்தின் மூலம் ருசித்துக் கற்பனையில் மயங்கும் போலி வாழ்வினை இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமூகம் சார்ந்த இளைய தலைமுறையினர் தம்மைச் சினிமாக் கதாநாயகன், கதாநாயகியாகப் பாவனை பண்ணி நடத்தும் வேடிக்கைகளும் ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதன் விளைவாகவே இந்த மக்கள் மத்தியில் பாலிய பருவத் திருமணங்கள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன. இந்த மக்கள் திட்டமிடாது வாழ்வு நடத்தி அதிக குழந்தைகளை வேறு பெறுகின்றனர். இவைகள் மாத்திரமல்லாது புகைப்பிடித்தல, மது அருந்துதல், போதைப் பொருள் உட்கொள்ளுதல் போன்ற சமூகப் பிறழ்வான நடத்தைகளும் இவர்களிடம் காணப்படுகின்றன.

> "...நிஜ வாழ்வில் அனுபவிக்கக் கிட்டாத சுகபோகங்களைச் சினிமா என்னும் ஊடகத்தின் மூலம் ருசித்துக் கற்பனையில் மயங்கும் போலி வாழ்வினை இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்..."

வாழ்வில் வேறுவிதமான நேரிய இன்பங்களைப் பெறுவதற்கு இயலாத இந்தமக்கள் இந்தவகையான இன்பங்களையாவது அனுபவிக்க வேண்டுமென இவர்கள் நடத்தைகளை நியாயப்படுத்துகின்றவர்களும் சமுதாயத்தில் இருக்கவே செய்கின்றார்கள். இந்த மக்கள் வாழ்வில் மாற்றம் உருவாக்கி இவர்கள் முன்னேறுவதை விரும்பாதவர்களே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றவர்களாக இனங்காணப்படவேண்டும். அடிநிலை மக்கள் 'இருக்கும் இடத்தில் இருக்க வைத்துக்கொள்ளவேண்டும்' என்பதில் அவர்கள் மிக எச்சரிக்கை யாகவும் சாதுரியமாகவும் நடந்து கொள்ளுகின்றார்கள்.

அடிநிலை மக்கள் மத்தியில் தம்மைப் பற்றிய விழிப்புணர்வு தோன்றாத வண்ணம் தடுத்து நிற்கும் இன்னொரு தடைக்கல் விதி பற்றி அவர்கள் உள்ளங்களில் இருந்து வரும் அசைக்கவியலாத நம்பிக்கை எனலாம். குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில், சாதியில், சமயத்தில், இனத்தில் வந்து பிறப்பதற்குக் காரணம் விதி என்றே நம்பும்படி இந்தச் சமுதாயம் இவர்களை உருவாக்கி விட்டிருக்கின்றது.

இந்த மக்கள், ஏனைய மக்கள் போலச் சமுதாயத்தில் தாமும் வாழ வேண்டும் என்னும் உண்மையைக் கண்டு, உணர்ந்துகொள்ளும் அறிவினைப் பெற்றாக வேண்டும். இத்தகை அறிவு இல்லாமையினாலேயே தம்மைச் சூழ்ந்துள்ள இருளில் இருந்து விடுபடுவதற்கு இயலாது அல்லற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இருண்ட வாழ்விலிருந்து இவர்கள் விடுதலை பெறவேண்டுமானால் தம்மைத்தாமே அறியும் அறிவினை இவர்கள் பெறவேண்டும். இந்த அறிவினை எந்தக் கல்லூரியிலும் கற்றுத்தேறி பெற்றுவிடுவதென்பது இயலாத காரியம். இன்றைய கல்வி நிலையங்கள் இவர்கள் வாழ்வில் விடிவைத் தோற்றுவிக்கத் தவறின அல்ல. உண்மையில் கல்வி நிறுவனங்களுக்கு வெளியில் இவர்கள் தம்மைத் தாம் கண்டுகொள்ளும் அறிவு இவர்களுக்குப் புகட்டப்படவேண்டும். அதனைச் செய்யவேண்டிய பணி கலை, இலக்கியங்களின் பணியாக அமைதல் வேண்டும். குறிப்பாக, தெருக்கூத்து அல்லது வீதி நாடகம் என்னும் கலைவடிவத்துக் கூடாக இந்த மக்களைச் சென்றடைய வேண்டியவைகள் நிறைய உண்டு. அவைகள் இவர்களைச் சென்றடையும்போதுதான் இந்த அடிநிலை மக்கள் சமுதாயம் மாற்றத்தைத் தோற்றுவிக்க முற்படும். அப்பொழுது புதிய ஒரு சமுதாயம் உருவாகும். அடிநிலை மக்களெனச் சுட்டிக் சொல்லப்படும் மக்களற்ற புதிய ஒரு சமுதாயமாக அது உருவாக வேண்டும்.

**தெணியான்**

# முன்னாள் மட்டு எம்.பியின் வீடு குண்டினால் தகர்ப்பு!

கொழும்பு,ஒக்.6

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான காலஞ்சென்ற நிமலன் சௌந்தரநாயகத்தின் வீடு இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்திருந்த அவரது வீடு கடந்த செவ்வாய் இரவு மழை பெய்து கொண்டிருந்த சமயத்தில் தகர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நிமலன் சௌந்தரநாயகம் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. (ஐ)

# குளங்களைத் திருத்தினால் போதாது அவற்றைப் பேணிப் பயன் பெறவேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் கூறுகிறார்

வலிகாமம் தெற்கு, ஒக்.6

தூர்ந்துபோயுள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்தால்மட்டும் போதாது. அவற்றை நன்கு பேணிப் பாதுகாப்பதுடன், குளங்களில் தேங்கும் நீரைப் பயன்படுத்தி உணவுப் பயிர்களையும், மரக்கறி வகைகளையும் உற்பத்தி செய்யவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன்.

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட சங்கானை மண்டிகைக்குளம் அண்மையில் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டது. இது தொடர்பாக நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தாவது:-

மண்டிகைக்குளம் கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் பராமரிக்கப்படாமல், விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் இருந்து வந்துள்ளது.

தற்போது இப்பகுதி விவசாய சம்மேளனங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியாலும், தொல்புரம் கமநல சேவை கேந்திர நிலையத்தின் உத்தியோகத்தர்களின் - முயற்சியாலும், பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் நிதி உதவியுடன் இக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இக்குளத்தை மேலும் பராமரிக்க வேண்டியது இப்பகுதி விவசாயிகள் உட்பட பொதுமக்களின் கடமையாகும். விவசாயம் செய்யும் மக்கள் தமது பொருள்களைச் சிறந்த முறையில் விற்பனை செய்யமுடியாத நிலையும் இங்கு தோன்றியுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு குடாநாட்டில் சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளும், உணவுப் பயிர்களும் மன்னார் ஊடாகத் தென்பகுதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார் - என்றார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இயந்திர வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் மனிதவளத்தைக் கொண்டு - மனித சக்தியைக் கொண்டு - இப்பகுதி விவசாய சம்மேளனத்தினரின் ஒத்துழைப்புடன் இக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 924 குளங்கள் உள்ளன. இவற்றுள் 162 குளங்கள் மாத்திரமே இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன. எம்மிடம் 'புல்டோசர்' போன்ற இயந்திர வசதிகள் இல்லை. விரைவில் இரண்டு புல்டோசர் இயந்திரங்கள் யாழ். மாவட்டத்துக்கு கிடைக்கவுள்ளன. அவை கிடைத்தவுடன் மிகுதியாக உள்ள அத்தனை குளங்களும் புனரமைப்புச் செய்ய வாய்ப்பு ஏற்படும் - என்றார்.

பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி பா.அஞ்சனா, விவசாய சம்மேளனத் தலைவர் சு.செல்லத்துரை, செயலாளர் வே.சிவலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (ஐ-7-29-152)

# ஓராண்டின் நீங்கா நினைவில்....



திருமதி
## சிவலிங்கம் கண்ணம்மா

அன்னையின் மடியில் 07-11-1917 ஆண்டவன் அடியில் 17-09-2000

திதி:-06-10-2001

*பாசத்தோடு நல்ல பண்புகளை ஊட்டி - எமைப்*
*பாரினில் உயர்த்திட்ட நேச தீபமே!*
*நீங்கள் இவ்வுலகை நீங்கி ஓராண்டானாலும்*
*எம் நெஞ்சத் துடிப்பு இருக்கும் வரை*
*நீங்காது உங்கள் நினைவுகள் என்றென்றும்.*

நிரந்தர முகவரி:
இல.674,கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தற்காலிக முகவரி:
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

(92969)

## 'ரெலிகொம்' வாடிக்கையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

'ரெலிகொம்' நிறுவனத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் வாடிக்கையாளர்களின் நலன் குறித்த கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பஸ்தியன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மோட்டோரோலா உரிமையாளர் சங்கத் தலைவர், யாழ்.மாட்ட தொலைத் தொடர்பாளர் ஒன்றியத் தலைவர், வடமராட்சி தொலைபேசிப் பாவனையாளர் சங்கத் தலைவர், யாழ்.வணிகர் கழகத் தலைவர் மற்றும் மேற்படி அமைப்புக்களில் ஒரு அமைப்புக்கு இரு பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

மோட்டோரோலா தொலைபேசி வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)


யா/சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## உலக ஆசிரியர் தினம்

**"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"**

எம் இனிய அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் உலக ஆசிரியர்கள் அனைவரையும் சீரும் சிறப்புக்களும் பெற்று, பல்லாண்டு காலம் நீடூழி வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

*றக்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/18487)
மாணவர்கள், பெற்றோர்கள்,
பழைய மாணவர்கள்.

## எழுதுவினைஞர், கூட்டுறவுப் பரிசோதகர்

பரீட்சைக்குரிய பயிற்சி வகுப்புகள்

பிரிவு II

**சனி, ஞாயிறு 2 மணி, ஆரம்பமாகிவிட்டது.**

பிரிவு III

**ஆரம்பம்: 08.10.2001 (காலை 9 மணி)**

**ஆசிரியர்: அ.குமாரவேல்**

(92939)

***புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்.***

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

**நிகழும் மங்களகரமான விஷு வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் நாளை (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.50 மணிமுதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்**

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

## சைந்தவி அவர்களுக்கு

**பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்த, காமாட்சி அம்மன் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் அனைவரும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**மிருதங்க வித்துவான் வே.அம்பலவாணர் குடும்பத்தினர்**
**திரு.திருமதி அம்பலவாணர் ஜெயராமன்.**
**(வயலின் வித்துவான்)**

*2, சேர் பொன். இராமநாதன் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.*
(92982)

# யாழ்.மாவட்ட மக்களுக்கு ஒரு நற்செய்தி....!

# 'சனிக்கிழமை தோறும் வங்கிச் சேவை'

இலங்கை வங்கியின் யாழ்.மேற்தரக் கிளை இன்று (6.10.2001) சனிக்கிழமை முதல் தொடர்ந்து சகல சனிக்கிழமைகளிலும் மு.ப.9.00 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை திறந்திருக்கும்.

மேற்படி சேவை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி க.துரைராஜா அவர்களால் இன்று (6.10.2001) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

☞ வெளிநாட்டு உண்டியல் மாற்றல்.
☞ வெளிநாட்டு தாள் நாணயங்கள் மாற்றுதல். ☞ தங்க நகை அடகுக் கடன் சேவை

உட்பட சகல வங்கிச் சேவைகளும் மேற்கொள்ளப்படும்.

***இலங்கை வங்கியின் வாடிக்கையாளராக இன்றே இணைந்து பயனடைவீர்கள்.***

## இலங்கை வங்கி
உங்கள் தேவைகளைச் சந்திக்கும்.

சிரேஷ்ட முகாமையாளர்,
இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம்.

(சி18516)

# யாழ்.மாணவர் கல்வித் தரம் வீழ்ச்சி கண்டு செல்கின்றதா?

## இன்றைய ஆசிரியர் தின சிந்தனை இது!

இன்று, ஒக்ரோபர் 6, ஆசிரியர் தினமாகும். சமூகத்தில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்ட தினமாகும். இளம்பிள்ளைகளின் மேம்பாட்டில முக்கியமாகப் பங்காற்றுபவர்கள் ஆசிரியர்கள் என்பதனை அனைவருக்கும் எடுத்துக் கூறும் நாள். எமது வருங்காலச் சந்ததியினரின் கல்வி மட்டுமல்ல, அவர்களின் முழு ஆளுமை விருத்தியுமே ஆசிரியர்களின் கைகளிற்தான் உள்ளது.

இன்றைய தினமானது பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரினதும் உள்ளங்களில் கல்வி பற்றிய ஒரு சிந்தனையை தூண்ட வல்லது. இவ்வேளையில் பொதுவாக எமது நாட்டின் கல்விநிலை பற்றியும் சிறப்பாக எமது பிரதேசத்தின் கல்விநிலை பற்றியும் சில எண்ணங்கள் எழுகின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஐந்தாம் தரத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி அண்மையில் வெளியானது. அதன்படி கொழும்பு மாவட்ட வெட்டுப் புள்ளி 123, வவுனியா 121, முல்லைத்தீவு 120, கிளிநொச்சி 120, யாழ்ப்பாணம் 118. முன்னொருகால் (தற்பொழுதும்) பின்தங்கிய பிரதேசங்களாகக் கருதப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகளிலும் பார்க்க யாழ்ப்பாண மாவட்டத்தின் புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி குறைவாகக் காணப்படுகின்றது. சில ஆண்டுகளாக இந்நிலை தொடர்கின்றது. ஆனால் ஒரு காலத்தில் யாழ்ப்பாண மாவட்டப் பெறுபேறுகள் முன்னிலையில் நின்றமையும் கொழும்பு மாவட்டத்துக்குச் சரிநிகராக நின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலை எப்படி உருவாகியது?

சென்ற வருட ஜி.சீ.ஈ.உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு திறமை அடிப்படையில் அனுமதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. மாவட்ட அடிப்படை அனுமதி முறை (Quota) நடைமுறையில் இல்லையேல் அனுமதி பெற்றோர் தொகை மேலும் குறைந்திருக்கும். ஒரு காலத்திலே தரப்படுத்தல் முறை பல்கலைக்கழக அனுமதிக்கு வேண்டாமெனவும் திறமை அடிப்படையிலேயே அனுமதிக்கப்படவேண்டுமெனவும் குரல் எழுப்பியது யாழ். மாவட்டம். ஆனால் இன்று யாழ்.மாவட்ட மாணவர்களுக்குக் கைகொடுப்பது மாவட்ட அடிப்படை அனுமதிமுறையே. இதுவும் ஒருவகைத் தரப்படுத்தல்தானே! கலைத்துறை சம்பந்தமான பல்கலைக்கழக அனுமதியினைப் பார்ப்போமானால், இந்த அனுமதி முற்றுமுழுதாகத் திறமை அடிப்படையிற்றான் வழங்கப்படுகின்றது. மாவட்ட அடிப்படையான அனுமதி கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக அனுமதிக்குத் தகுதிபெற்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. எனவேதான் யாழ்.பல்கலைக்கழகத்தில் காணப்படும் கலைத்துறை மாணவர்களுக்கான நூற்றுக்கணக்கான வெற்றிடங்கள் - கற்பதற்கு இடங்களிருந்தும் கற்க மாணவர்கள் இல்லாத பரிதாப நிலை!

அ.பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

எமது நாட்டின் கல்விநிலையினைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, அது எங்கே செல்கின்றது என்ற வினாவும் எழுகின்றது. அரசாங்கங்கள் மாறும்பொழுது, ஒன்று முன்னையதிலும் பார்க்க 'திறமை'யான கல்வி முறையினைத் தர முற்படுகின்றது. இது இந்நாட்டின் வழமையாகிவிட்டது. அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு கல்வி முறைமையும் முன்னையதிலும் பார்க்கத் 'திறமை' வாய்ந்தது தானா? பதவியிலிருக்கும் அரசாங்கத்தின் கல்வி மாற்றங்களை பாராட்டிப் பேசுவதையே வழமையாக்கிக் கொண்டுள்ளனர் அதிபர்களும் ஆசிரியர்களும் கல்வி அலுவலர்களும். நடைமுறையிலிருக்கும் கல்வி முறைமையை வேண்டியவேளையிற் கூட அவர்கள் விமர்சிக்கத் துணிவதில்லை. இன்று கல்விச் சமூகத்தினரிடையே சீர்திருத்தங்களைப்பற்றி உயர்வாகப் பேசுவது ஒரு கலாசாரமாக மாறியுள்ளது.

தற்போதைய கல்விச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பொதுவாகக் கூறப்படுவதாவது அவை பிள்ளைகளை ஆக்கத்திறன் மிக்க சுய விருத்தியில் இட்டுச் செல்ல வழி சமைப்பவையாகும் என்பதாகும். உண்மைதான். குழுச் செயற்பாடு, செயற் திட்டங்கள், தேடற் செயற்பாடுகள், வெட்டுதல் ஒட்டுதல் போன்றவற்றை நோக்கும் பொழுது அக்கூற்று அடிப்படையில் சரியானதே. ஆனாலும் பாடசாலையில் ஆறு மணித்தியாலங்களைச் செலவழித்துவிட்டு அதற்கும் மேலாக இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களை ரியூசனில் செலவிடும் மாணவரின் நிலை பரிதாபத்திற்குரியது. அப்படியானால் மாணவர்களைப் பெரிதும் கவரும் ரியூசன் நிலையங்கள் கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாகக் கற்பிக்கின்றனவா?

கல்விச் சீர்திருத்த அமுலாக்கல் தங்களை வகுப்பறைக் கற்பித்தலுக்கு மேலதிகமாக எழுதுவினைஞர்களாகவும் செயற்படவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தியுள்ளதாக ஆசிரியர்கள் கருதுகின்றனர். சீர்திருத்தங்களின் அமுலாக்கல் சரிவர நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படைத் தேவைகள் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது. அமுலாக்கலுக்கு வேண்டிய பயிற்சி சகல ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதா?

திட்டமிடப்படாத வகையில் நடத்தப்படும் சேவைக்காலப் பயிற்சிகள் போதுமானவையா?

போதிய வளங்கள் பாடசாலைகளிலுண்டா?

நல்ல பல அம்சங்களை உள்ளடக்கிய கல்விச் சீர்திருத்தங்கள் எதிர்பார்த்த பலன்களைத் தருவதற்கு சரியாக அமுலாக்கப்படல் வேண்டும். வளங்களும் ஆளணியினரும்(ஆசிரியர்கள் முக்கியமாக) பொருத்தமாக அமைதல் வேண்டும். ஈடுபாடுடைய ஆசிரியர்கள் அவசியம். அவர்களையும் பங்காளிகளாக்கி, அவர்கள் பயனுள்ள பின்னூட்டலை வழங்கக்கூடிய சூழலை உருவாக்குதல் வேண்டும். அப்படியான சூழல் இன்று உண்டா? ஆசிரியர்கள் மனநிறைவுடன் ஈடுபடாது விடின், பல செயற்பாடுகள் அவற்றின் நம்பகத்தன்மையை இழந்து விடும். நிறந்தீட்டல் இந்நிலையை நோக்கிச் செல்கின்றதெனலாம்.

கல்விச் சீர்திருத்த அறிமுகத்துக்கும் அறுவடைக்குமிடையில் பல வருட இடைவெளி உள்ளமையால் அதன் பலாபலன்களை உடனடியாக அறியமுடியாத நிலை உண்டு. சீர்திருத்த அமுலாக்கலுக்கு உட்படுத்தப்பட்ட முதற்தொகுதி மாணவர்கள் இவ்வருடம் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சீர்திருத்தங்களின் தாக்கத்தினை மதிப்பிட ஓரளவேனும் உதவலாம். ஆனாலும் கல்வித்திட்டமிடலாளர்கள் தமது திட்டங்கள், செயற்பாடுகள் நல்ல பயனைத் தருகின்றனவென ஒரு தோற்றத்தை மக்களிடையே உருவாக்கத் தவறான வழிகளைப் பின்பற்றல் வழமையாகிவிட்டது.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களின் பெறுபேறுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையத் தொடங்கின. இது கல்வி அமைச்சுக்கும் அரசாங்கத்திற்கும் சங்கடத்தை உருவாக்கியது. இதற்கு கல்வி உயர்மட்டம் ஒரு சுலபமான தீர்வினை அறிமுகப்படுத்தியதை யாவரும் அறிவர். கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் கற்றல், கற்பித்தல் தரங்களை உயர்த்துவதற்குப் பதிலாக, இப்பாடங்களில் பின்தங்கிய, கவனமில்லாத மாணவர்களும் நல்ல பெறுபேறுகளை பெறக்கூடிய வகையில் அவர்களுக்கு உகந்த மேலதிக வினாத்தாள் ஒன்றினை அறிமுகப்படுத்தினர். இதன் மூலம் கணித, விஞ்ஞான பாடங்களில் நல்ல தேர்ச்சியினை மாணவர்கள் அடைவதாகக் காட்டிக் கொள்ளமுடியுமே அல்லாமல், மாணவர்களுக்குப் பிழையான ஒரு பின்னூட்டல் வழங்கப்படுகின்றது. இது போன்ற செயற்பாடு வருகின்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கும் ஏற்படாதா?

இன்றைய ஆசிரியர் தினத்திலே எமது நாட்டில் இடம்பெறும் கல்விச் செயற்பாடுகள் பற்றி மக்களை சிந்திக்க வைக்கும் நோக்கில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது வருங்காலச் சந்ததியினரான மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நாம்எல்லோரும் இங்கு கூறப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துவது அவசியமென நம்புகின்றேன். ★

## அக்டோபர் ஆறில் ஐய வினாக்கள்!

*வேலிக்கு எல்லையிடல்; வீட்டுக்கு நாளெடுத்தல்;*
*பூப்படைந்த பெண்ணுக்கு நீர்வார்க்கும் தினம்பார்த்தல்;*
*கூட்டத்தில் கொடியேற்றல்; குத்து விளக்கேற்றல்;*
*நாள்க்காசு போடல்; நாள்விதைப்பு மணிதூவல்;*
*கண்டா மணியின் முதலோசை தானெழுப்பல்;*
*கணவன் மனைவி பிரிவைச் சரிப்படுத்தல்;*
*கல்யாணக் கலப்புக்கு முதற்செம்பு தான்பெறுதல்;*

*சங்கக் கடைத்தலைவர்; தர்மகர்த்தாச் சபைச்செயலர்;*
*தம்முள் முரண்பட்டுத் தடியெடுத்துச் சண்டையிடும்*
*சண்டித் தனத்தை சமாதானம் செய்துவைத்தல்;*
*இன்னும் இன்னும் எத்தனையோ அத்தனைக்கும்!*

*"சட்டம்பி யின்றிச் சமூகம் இயங்காது"*
*என்ற நிலை அருகுதற்கு எவர் பொறுப்பு?*

*சட்டம்பித் தொழில் செய்வோர் சமூகத்தில் பெருகியதா?*
*சம்பள அதிகரிப்பால் உருவான அழுக்காறா?*
*சமூகம் தனக்களித்த தலைமைப் பொறுப்புக்களின்*
*நம்பகத் தன்மையை நலிவடையச் செய்தமையா?*
*அக்டோபர் ஆறில் அனைத்துத் தரப்பார்க்கும்*
*அந்நாளின் சட்டம்பியின் ஐய வினாக்களிவை!*

- புத்தூர் வே.இளையகுட்டி.

# புதிய தலைமுறை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.6

குடாநாட்டின் புதிய தலைமுறை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுதியான 'இங்கிருந்து....' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுகதை எழுத்தாளர் கோகுலராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலாநிதி க.குணராசா, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர்.

வெளியீட்டுரையை 'சிற்பி' சிவசரவணபவன் நிகழ்த்துவார்.

மூத்த எழுத்தாளர்களான சொக்கன், வரதர் ஆகியோர் முதன்மைப் பிரதியைப் பெற்றுக்கொள்வர்.

நூலின் மதிப்பீட்டு உரைகளை எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசாவும், செம்பியன்செல்வனும் வழங்குவர். எழுத்தாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அங்கு இடம்பெறும்.

தாட்சாயினி, இயல்வாணன், கோகுலராகவன், சிவாணி, சத்தியபாலன், இராகவன், சாரங்கா, பிரபாகரன், இரவீந்திரன், குமுதினி, கதிர்காமநாதன், உடுவில் அரவிந்தன் ஆகிய பன்னிருவரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன.

இவர்களில் பலரும் 'சஞ்சீவி' வாரமலரில் வரைந்த சிறுகதைகள் மூலம் இலக்கிய உலகில் அறியப்பட்டவர்களாவர்.

(ஐ)

### பருத்தித்துறை, சுன்னாகம், மானிப்பாய்

# இலங்கை வங்கிக் கிளைகளிலும் நகை அடகுக் கடன் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கை வங்கியின் பருத்தித்துறை, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய கிளைகளில் தங்கநகை அடகுக் கடன் சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறைக் கிளையிலும் -

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சுன்னாகம் கிளையிலும் -

அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு மானிப்பாய்க் கிளையிலும்-

இது தொடர்பான ஆரம்ப வைபவம் இடம்பெறும். இந்த வைபவங்களில் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி சுதுரைராஜா கலந்து கொண்டு அடகுக்கடன் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

மேற்படி அடகுக் கடன் சேவை வார நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறும்.

(க-7)

### பிரமாண்டமான ஏற்பாடுகளுடன்

# யாழ். மாநகரசபையின் பொன்விழா டிசெம்பரில்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.மாநகரசபையின் 50ஆவது ஆண்டு நிறைவுப் பொன்விழாவை மிகவும் பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை சபை மேற்கொண்டு வருகின்றது.

இத்தகவலை நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மேயர் என்.ரவிராஜ் வெளியிட்டார்.

1949 ஆம் ஆண்டு மாநகரசபை அந்தஸ்தத்துப் பெற்ற யாழ்.மாநகராட்சியின் பொன்விழாவை கடந்த காலங்களில் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை நாட்டில் காணப்படவில்லை என்றும் -

தற்போது இவ்விழாவினைக் கொண்டாடுவதன் பிரதான நோக்கம் சபை ஊழியர்களின் சேவையைக் கௌரவிப்பதே ஆகும் என்றும் -

இவ்விழா, அரசியல் கலப்படமற்ற - யாழ்.மாநகர மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கின்ற ஒரு பெரு விழாவாக அமையுமென்றும் - மேயர் என்.ரவிராஜ் மேலும் கூறினார்.

பொன்விழாச் சிறப்பு நிகழ்வுகள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள ஈ.பி.டி.பியின் யாழ்மாநகர சபை உறுப்பினர் கிங்ஸ்லி சுவேசன் தலைமையில் உறுப்பினர்கள் மூதவநாதன், எஸ்.சுபத்திரன், எம்.மங்களநேசன், செ.கந்தையன், எஸ்.பரராசசிங்கம், கே.விஜயரட்ணம், க.கனகரட்ணம் ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஒவ்வொரு நிகழ்வுகளையும் நெறிப்படுத்த ஆறு உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கிடையேயான இணைப்பாளராக யாழ். மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.இரட்ணசிங்கம் பணியாற்றுவார்.

பொதுமக்கள், மாநகரசபை ஊழியர்கள், அவர்களது பிள்ளைகள், ஆகியோர் கலந்துகொள்ளும் வகையில் விளையாட்டுப் போட்டிகள், இலக்கிய, அறிவியல் போட்டிகள் ஆகியவை பொன்விழாவையொட்டி ஒழுங்குசெய்யப்படவுள்ளன.

இறுதிநாள் நிகழ்விற்கு ஒரு வாரம் முன்னதாக 'சிரமதான வாரம்' என பிரகடனப்படுத்தப்பட்டு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொன்விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இந்நூலில் மாநகரசபையின் வரலாறு மற்றும் ஏனைய பல்வேறுபட்ட ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இந்நூலில் பிரசுரம் செய்யக்கூடிய வகையில் யாழ்.மாநகரசபை தொடர்பான நீண்டகாலத் தகவல்களை அறிந்தவர்கள் அவற்றை நூலில் இடம்பெறச் செய்யலாம்.

பொன்விழா நினைவுச் சின்னம் ஒன்று யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் பதிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள இப்பொன்விழாவிற்கு யாழ்.மாநகரசபை, மாநகரத்தின் சகல மக்களினதும் ஆலோசனை மற்றும் ஆதரவை வேண்டி நிற்கிறது - என்று மேயர் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)

# சமூகநலத் திட்டங்கள் வலி.கிழக்கில் ஆரம்பம்

கோப்பாய்,ஒக்.6

வலி.கிழக்கு பிரதேச சபையினால் பல்வேறு சமூகநலத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அவை வருமாறு:-

★ உரும்பிராய் பகுதியில் இயங்கும் மூன்று இடம்பெயர்ந்தோர் முகாம்கள் புனரமைப்பு.

★ நீர்வேலி, இருபாலை பகுதி மக்களுக்கு குழாய்க்கிணறு மூலம் குடிதண்ணீர் வசதி.

★ விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த வாகன வசதி.

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, (கோப்பாய் பிரதேச செயலகம், நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி.

ஆகிய பகுதிகளில் பஸ்தரிப்பு நிலையக் கட்டடம் அமைத்தல்.

ஆகிய பணிகள் கடந்த வாரம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(க-72)

# சம்பள அதிகரிப்பை அமுல் செய்யும்வரை அரசாங்க ஊழியர்களுக்கு விசேட படி?

## அரசு ஆலோசிப்பதாகத் தகவல்

கொழும்பு,ஒக்.6

சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு இணங்க, அரச ஊழியர்களின் சம்பளங்களை அடுத்த ஜனவரியிலிருந்து அதிகரிப்பது தொடர்பாக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்தும்வரை - அதாவது அடுத்த ஜனவரிவரையான - மூன்று மாதங்களுக்கு அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு இணைந்த படி ஒன்றை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் தொழிற் சங்கங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கவே இந்த இடைக்காலக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக சிபாரிசுகளை மேற்கொள்ள கடந்த ஆண்டு ஜூலை மாதம் அமைக்கப்பட்ட சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்படவிருந்தது.

கடந்த ஜூலை மாதத்திற்குள் சிபார்சுகளைக் கையளிக்குமாறு ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டபோதிலும், ஆணைக்குழுவிற்குக் கிடைத்த பெருமளவிலான ஆலோசனைகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க மேலதிக காலத்தை ஆணைக்குழு செலவிட நேர்ந்தது.

ஆணைக்குழுவின் சிபார்சுகள் மாற்றங்கள் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படின் அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளில் அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிக்கவேண்டியதேவை உருவாகாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பள அதிகரிப்புப் பற்றிய விவரங்களை வெளியிடமறுத்த ஆணைக்குழுப் பேச்சாளர் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கான சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (ஐ)

---

## நல்வாழ்த்துக்கள்

எங்கள் மாணவர்களுக்கு
வழிகாட்டும் ஒளித் தீபங்களான
**அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களை**
சர்வதேச ஆசிரிய தினமான இன்று வாழ்த்திப் போற்றுகின்றோம்.

பெற்றோர்கள் மற்றும்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.**

06-10-2001 (C/18531)

---

நல்லாசான்களுக்கு

## எமது நல்வாழ்த்துக்கள்!

கண்ணிலே கனிவும்,
வார்த்தையில் தெளிவும், செயலிலே கண்டிப்பும்,
அரவணைப்பில் அன்பும் காட்டி
அறிவையும், கலையுணர்வையும் சேர்த்து ஊட்டி
எமது மாணவ சமூகத்தின் வளமான வாழ்வுக்கு
வழிகாட்டியாகத் திகழும் உங்களுக்கு
*யாழ். இந்து சமூகத்தின் நல்வாழ்த்துக்கள்.*

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கமும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்.

06-10-2001 (C/18532)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி
**நாகரட்ணம் நகுலாம்பிகை,**
சுழிபுரம் மத்தி,சுழிபுரம்.

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டதாரியாக பட்டம்பெற்று இன்று (06.10.2001) கௌரவிக்கப்படுகின்றார். இவர் மேன்மேலும் முன்னேற்றமடைய எல்லாம்வல்ல மருதடி விநாயகர் துணை நிற்பாரென வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
சுந்தர்சன் ஸ்தாபனத்தினரும்,
ஊழியர்களும்.

*மத்திய சந்தை முன்பாக,*
*மானிப்பாய்.*
*தொ.பே.இல: 2751*

(C/18522)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1946
-
08
-
14



மறைவு
2000
-
10
-
16

**திருமதி தையல் நாகேஸ்வரி அரியநாயகம்**
*(தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)*

திதி:-06-10-2001

ஒப்புற வாழ்ந்து வளமூட்டி எம்மை
செப்புற வழி நடத்தி செம்மை
இப் பிறப்பில் ஊட்டிய உம்மை
எப்பிறப்பில் காண்போம் இனி?

இன்று (06.10.2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்

*காதி அபூபக்கர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(92990)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று வணிகமாணிப் பட்டம் பெறுகின்ற
எமது அபிவிருத்திப் பரிசோதகர்
**திரு.செ.நிமலரங்கன்**
B.COM (Hons) SPL
அவர்களை மேலும் பல பட்டங்களைப்
பெற்று பல்லாண்டு வாழ
வாழ்த்துகிறோம்.

தென்மராட்சிப் பிரதேச
அபிவிருத்தித் தொண்டர்கள்,
பரிசோதகர்கள்,
போதனாசிரியர்கள், ஊழியர்கள்.

அபிவிருத்தி பயிற்சி நிலையம்,
வதிரிச் சந்தி, வதிரி.

(92996)

---

## நன்றிகள் பல......

எமது மகள்



**செல்வி**
**உதயகுமார் நிவேதிகா**

சிறந்த முறையில் புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் உயர்ச்சி பெறக் காரணமாகவிருந்த யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் அதிபரையும், ஆசிரியர்களையும் இன்றைய ஆசிரியர்தின நன்னாளில் நன்றிகள் பல கூறி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

\-- குடும்பத்தினர்.

*91, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(92973)

---

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கொடிகாமம்

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக்கூட்டம்

### 2001-10-14

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வகிமா) அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இற்கு அமையவும் மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கு அமையவும் சங்கத்தின் சகல கிளைகளிலும் கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை சகல உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளையின் பொதுச்சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் :- 2001-10-14 ஞாயிறு**
**முற்பகல் 10மணி**

**கூட்டம் நடைபெறும் இடம், தவிசாளர் பெயர் விவரம்**

| தொ.இல | கிளை.இல | கிளைப் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | 01 | கொடிகாமம் | திரு. எஸ். திருச்செல்வம் | கிளைக் கட்டடம் |
| 02. | 02 | கச்சாய் பாலாவி | திரு. என். தவநாதன் | கிளைக் கட்டடம் |
| 03. | 03 | வினோபா | திரு. எ. நாகலிங்கம் | திரு இருதயக் கல்லூரி கரவெட்டி |
| 04. | 04 | அல்லாரை | திரு. பீ. மோகன் | |
| 05. | 05 | மந்துவில் மத்தி | திரு. கே. குமாரகுருலிங்கம் | |
| 06. | 06 | மந்துவில் | திரு. கே. சின்னராசா | |
| 07. | 12 | மிருசுவில் | திரு. பி. தட்சணாமூர்த்தி | |
| 08. | 13 | விடத்தற்பளை | திரு. எஸ். சண்முகநாதன் | |
| 09. | 14 | எழுதுமட்டுவாழ் | திரு. வி. கைலைநாதன் | |
| 10. | 15 | நாவற்காடு மேற்கு | திரு. ஐ. நாகேஸ்வரன் | |
| 11. | 07 | இயற்றாலை | திரு. வி. கே. அருந்தவநாதன் | பொன்னம்பலம் வித்தியாலயம் கரணவாய் |
| 12. | 11 | நவஜீவனம் ? | திரு. ரி. என். ராஜா | |
| 13. | 17 | கெற்பேலி | திருமதி ஜே. செல்வரட்ணம் | |
| 14. | 18 | தவசிகுளம் | திருமதி கே. இந்திராணி | |
| 15. | 19 | உசன் | செல்வி ஆர். இராசரத்தினம் | |
| 16. | 08 | வரணி | திரு. என். பத்மசோதி | கிளைக் கட்டடம் |
| 17. | 09 | இடைக்குறிச்சி | திரு. க. செல்வசோதி | கிளைக் கட்டடம் |
| 18. | 10 | நாவற்காடு | திரு. ஈ. கணேசு | அ. த. க. பாடசாலை குடமியர், வரணி |
| 19. | 16 | கரம்பைக்குறிச்சி | திரு. பி. மகேஸ்வரன் | அ. த. க. பாடசாலை கரம்பைக்குறிச்சி |

**முக்கிய குறிப்பு:**

இடம்பெயர்வு காரணமாக உறுப்பினர்களின் தற்போதைய தனிப்பட்ட முகவரியினை அறியமுடியாமையினால் ஒவ்வொரு தகைமை பெற்ற உறுப்பினருக்கும் தனித்தனி அறிவித்தல் அனுப்பி வைக்க முடியவில்லை. ஆகவே இந்த அறிவித்தலை ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தனித்தனி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன், கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான விவரமான அறிவுறுத்தல்கள் தற்போது செயற்படும் சங்கக் கிளைகளிலும், சங்கத் தலைமை அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**செ.கு.சண்முகநாதன்**
**கூ.அ.உ.ஆணையாளர்.**

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
திகதி:- 06-10-2001

(C/18560)

| | | | |
|---|---|---|---|
| | | சந் சனி | வி ரா |
| | இராசிச்சக்கரம் | | |
| | | | வெ |
| செவ் கே | | | ரு புத |

# இந்த வார இராசி பலன்

## 7 - 10 - 2001 – 13 - 10 - 2001

**மாற்றம்**

**07 – 10 – 2001 இல் ரோகினி-இடபம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

**09 – 10 – 2001 இல் மகரத்தில் - செவ்வாய் மாறும்.**

**11 – 10 – 2001 இல் கன்னியில் - வெள்ளி மாறும்.**

## மகாதேவா ஜோதிடம்

அடிமரவேருக்கு அவசியமான நீரை விட்டால் போதும் அவசியம், அவசரமானநாட்டின் தேவைகளை நிறைவேற்றச் சிலர் காத்திருப்பார்கள். அமெரிக்கா இங்கு காலூன்ற பச்சைக் கொடிகாட்டி எதிர்ப்புக்களை சில அரசியல்வாதிகள் சந்திப்பார்கள். அரசியலில் பதற்ற நிலை உருவாக இடம்உண்டு. எதிர்க்கட்சிகள் ஆதரவு தேட முயலும். இந்தியா அமெரிக்கப் போர் சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆதரவு தேட முயல இடமுண்டு. அரசியல்வாதிகளில் சிலர் மக்கள் ஆதரவை இழப்பார்கள். ஜெயலலிதா மீண்டும் தெற்கில் செல்வாக்குப் பெற வாய்ப்பு உண்டு. மத்தியகிழக்கில் அமெரிக்காவின் உளவு ஆராய்ச்சி நடக்கும். ஆனால் அமெரிக்கா, பாகிஸ்தான், பிரிட்டிஷ் பிரான்ஸ் நாடுகளில் முஸ்லிம் தீவிரவாதத் தாக்கம் திடீரென நிகழ இடம்உண்டு. பஸிபிக்-இந்து சமுத்திரப்பிராந்திய நாடுகளில் இயற்கை, செயற்கையின் அழிவுகள் நிகழும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

சிலர் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை அருமையாகச் செயற்படுத்தாமல், தாறுமாறாக நடந்து இழப்பு நடந்த பின் களைப்படைந்து, ஏமாற்றமடைந்து வேதனைப் படுகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் ஏமாற்றங்கள் ஏற்படும். எதிர்ப்பாலார்களின் உதவிகள் கிடைக்கும். கொண்டாட்டங்களில் பங்கெடுப்பீர்கள். இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. நண்பர்கள் உதவி செய்வார்கள். வயிற்றுவருத்தம், வாய்வுத்தொல்லை, கண்கூச்சம் உஷ்ணபீடைகள் என்பன ஏற்படும். மருந்துத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:– திங்கள், சனி.

### இடபம்

இந்த உலகத்தில் ஜாதியைப் பார்க்கும் பலர் நீதியை மறந்து செயற்பட்டு பாவத்தைச் சேர்க்கிறார்கள். தொழில்ஸ்தானத்தில் ஒழுங்கு முறையில் செயற்பட்டு வாருங்கள். அல்லது வீண் பிரச்சினைகள் வரும். அவசரப்படாமல் கருமமாற்றுங்கள். சத்திய வாக்குகளைக் கண்டபடி கொடுக்காமல் நிதானமாகச் செயற்படுங்கள். சகோதரர்களின் அலுவல்களுக்காக ஓடி ஓடித்திரிவீர்கள். எவரும் உங்களை வெல்ல முடியாது. நாரிப் பிடிப்பு, கைகால் வேதனை, வாய்வுத் தொல்லை, மனப்போராட்டம் என்பன வரும். போக்குவரத்து, வியாபாரம், நகைத்துறை, குருத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:– சனி.

### மிதுனம்

அக்கினி சாட்சியாக, வேதம் சாட்சியாக, பிள்ளைகள் சாட்சியாக, மனைவி சாட்சியாக என்று சாட்சிகளை வைத்தும் இறுதியில் அனைத்தும் வெறுத்த பின்பு விரக்தியின் விளிம்பில் கதறுகிறார்கள். கண்ணீர் விடுகின்றார்கள் பிள்ளைகளைத் தண்டிக்கிறார்கள். அவரவர் விதைத்ததை அவரவர் தான் அறுவடை செய்ய வேண்டும். அதற்காக ஒன்றுமறியாத குழந்தைகளை வதைப்பதை, கொலை செய்வதை சட்டம் தண்டிக்காமல் இருக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் கோபத்தால் இழப்புக்களைச் சந்திப்பீர்கள். தானதர்மம் செய்வீர்கள். அரச உதவிகள் கிடைக்கும். அடிகாயங்கள், முதுகுநோ, மலச்சிக்கல், களைப்பு என்பன வரும். கடல்துறை, தரகு வேலைகள், ஹோட்டல், விவசாயத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- சனி.

### கடகம்

பெண்கள் ஒரு குடும்பத்தில் அடம்பிடிக்கக்கூடாது. அதனால் வேதனை, சோதனை அக்குடும்பத்தில் ஏற்படச் செய்யும். பிள்ளைகளைக் கிணற்றில் தூக்கிப் போடும் அளவு வாழ்வில் விரக்தி அடையாது பொறுமையாக இருக்க வேண்டும். தொழில் ஸ்தானத்தில் மறைமுக எதிர்த்தாக்கங்களைச் செய்ய முனைந்து அவமானப்பட நேரிடும். நெஞ்சுப்படபடப்பு, குருதி அமுக்கம், தோல் வருத்தம், சலவருத்தம் என்பன வரும். இடமாற்றங்கள் இழப்பைத்தரும், அரசியல்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை, வங்கிவேலை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:– சனி.

### சிங்கம்

பூத்துக்குலுங்கும் மாமரத்தின் பருவ மகிழ்வு போன்று ஒரு பெற்றோருக்கு, ஆசிரியர்களுக்கு தம்பிள்ளை, படித்து சாதனை செய்து பட்டம் பெறும் பொழுது மகிழ்வு பெருமை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பான சம்பவங்கள் ஏற்படும். இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. சில ஏமாற்றங்கள் பல நன்மைகளைக் கொடுக்கும் அடுத்தமாதம் நன்மைகள் நடக்கும். புதிய திட்டங்கள் தீட்டிப் பல உருவாக்கங்களைச் செய்ய எண்ணுவீர்கள். களைப்பு, நெஞ்சுச்சளி, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். காய்த்தமரத்திற்கு கல்லடியும், கனத்த அறிவாளிகளுக்கு சொல்லடியும் கொடுக்கும் சில பொறாமையாளர்களைக் காணும் காலமாகும். தொடர்ந்து துணிவுடன் உங்கள் பாதையில் போராடி முன்னேறுவீர்கள். எதிரிகள் நிலைகுலைந்து ஓடிஒளிப்பர். புடைவைத் துறை, சாய்ப்புச்சாமான்கள், மருந்துகள் விற்பனைத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

★ அதிர்ஷ்ட நாள்,- சனி.

### கன்னி

மனைவிமாரைச் சந்தோஷப்படுத்த எத்தனை துன்பங்களை, தவறுகளை ஆண்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. இடமாற்றங்கள் சகஜம். பொருளில், தொழிலில் நிதானமாக இருக்கவும். என்ன மிடுக்குடன் பேசுகிறீர்களாமே? எதிரிகள் பயப்படுவார்கள். பொருளால் வேதனை, காணி பூமி பற்றிய பேச்சுக்கள் ஏற்படலாம். செலவுகள் பற்றிய பயம் அடிக்கடி ஏற்படும். சளித்தொல்லை, தோல்வருத்தம், நாரிப் பிடிப்பு வர இடமுண்டு. புதிய தொழில் தொடங்க முயற்சி எடுங்கள். மின்சாரத் துறை, சட்டத்துறை, வங்கித் துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்களும் இலாபங்களும் கிடைக்க இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், சனி.

### துலாம்

கோட்டில் வழக்கு நடக்கும் பொழுது அத்துமீறிச் செயற்பட்டால் சட்டம் சும்மா இருக்க மாட்டாது என்பதற்கு ஜெயலலிதா மட்டும் சாட்சியமல்ல. இச் சமுதாயத்தில் எத்தனை பேர் இத் தவறுகளை விடுகின்றார்கள். எனவே நிதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் ஏன் அடிக்கடி சலிப்படைகின்றீர்கள்? நிர்வாகத்தில் விரும்பத்தகாதவர்களை விலத்தி நடந்தால் நன்று. உண்மைக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். சந்தர்ப்பமே இவ்வுலகம். முன்பு உங்களுக்கு வேதனை தந்தவர்களை சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது தண்டிக்காமல் விடமாட்டீர்கள். வயிற்றுப்பொருமல், சலவருத்தம்நாரிநோ, சளிஉஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். குருத்துறை, அரசியல் துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:– திங்கள், சனி.

### விருச்சிகம்

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதைப் பலபொய்களைச் சொல்லி நிறைவேற்றுகின்றார்கள். காசுக்காக மனிதர்கள் ஏமாற்றுக்களைச் செய்கின்றார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் காசுக்கு வேஷம் போடுபவர்களில் நிதானமாக இருக்கவும். அளவறிந்து செயற்படுங்கள். பொருளில் கட்டுப்பாடாக இருக்கவும். நெஞ்சுச்சளி, கைகால் உளைவு என்பன கொடுக்கும். இரவிலே கற்பனை வளம் யோசனை அதிகம் வரும். கலைத்துறை, ஹோட்டல்துறை, செய்தித் துறை, கொம்பியூட்டர் வியாபாரத்துறையினர்கள் போன்றவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்:-

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.

### தனுசு

நம்பிக்கை, அன்பு, பாசம் ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்தால் தான் உண்மை நட்பு, வாழ்வு ஒரு குடும்பத்தில் வளரும். தொழில் ஸ்தானமும் அதைப் போன்றதுதான். புரிந்துணர்வுகளால் பல நன்மைகள்ஏற்படும். வீடு, காணிகளில் வசதிகள் அதிகரிக்கும். சளித்தொல்லை, குருதியழுத்தம்வரஇடமுண்டு. தூரதேசச் செய்திகள் வரும். இடமாற்றங்களில் நன்மைகள் கிடைக்கும். இடுப்புநோ, மூலவருத்தம், வயிற்றுவருத்தம் என்பன கொடுக்கும். எலும்புத்தாக்கம் இருக்கும். வைத்தியம் செய்யவும். சட்டத்துறை, அச்சுத்துறை, கொம்பியூட்டர், பலசரக்கு வியாபாரம், போக்குவரத்துத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள் :- ஞாயிறு, திங்கள்.

### மகரம்

ஒரு குடும்பத்தில் புத்திரச் செல்வம் புதிய அனுபவம். அது துன்பத்தை இன்பமாக்க வல்லது. தொழில் ஸ்தானத்திலும் ஏற்ற இறக்க உணர்வுகள் மேலிடும். இடமாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் கொடுக்க இடமுண்டு. நரம்புப்பலவீனம், நாரி உளைவு, அதிக யோசனை, பயம், அஜீரணம் என்பன ஏற்படும். மருந்துத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள். தூரதேசச் செய்திகள் வரலாம்.

★ அதிர்ஷ்ட நாள்கள்- ஞாயிறு, திங்கள், சனி.

### கும்பம்

மனைவி, குழந்தைகளுக்குப் பயப்படாமல் அவர்களைக்கௌரவித்து வாழ்ந்து பாருங்கள். உங்கள் பொறுப்பில் ஓர் இருப்பு, பிடிப்பு, நம்பிக்கை நிச்சயம் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களைக் கௌரவித்து நடவுங்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படும். அதிக பாசமான உயிர் ஒன்றுடன் மோதி வேதனைப்படுவீர்கள் பொருள் இழப்பு வரலாம். பலவீனம் கொடுக்கும். குடும்பத்தில் கலகலப்பான சம்பவங்கள் நடக்கும். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். கால் வருத்தம், முழங்கால் பூட்டு வின்வின் என இருக்கும். பதற்ற நிலை உருவாகும். தோட்டத்துறை, பிரயாணத்துறை, குருத்துறை, அரசியல் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்–: ஞாயிறு, திங்கள், சனி.

### மீனம்

பெரிய பெரிய அழிவுகளை எல்லாம் மௌனம் காப்பாற்றி இருக்கின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் அமைதியாக இருந்து நல்லவற்றைச் செய்து வாருங்கள். பணவரவு, நண்பர்கள் வருகை, எதிர்ப்பாலாரின் உதவிகள் என்பன கிடைக்கும். தூரதேசத்துச் செய்திகள் மனநிறைவைக் கொடுக்கும். சளி, நரம்புநோ, கைகால் பிடிப்பு என்பன கொடுக்கும். இடுப்புவலி ஏற்படலாம். பிரயாணத்துறை, மருந்துத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், சனி.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (06-10-2001) சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் எமது கல்லூரி உப அதிபர்

**திரு. தா. அமிர்தலிங்கம்** அவர்கள்

கல்வியியல் துறையில் கலாநிதி பட்டம் பெற்றமைக்காகவும் எமது கல்லூரி ஆசிரியை

**செல்வி ம. கந்தையா** அவர்கள்

முது தத்துவமாணி பட்டம் பெற்றமைக்காகவும்

எமது கல்லூரி பெருமகிழ்வடைவதுடன் அவர்களுக்கு எங்களது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.

அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி. (93039)

## ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக என்றும் உதவுகின்ற யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள

**திரு. சி. சிவராசா** அவர்கள்,

வடமராட்சி கல்வி வலய பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், எமது பாடசாலை, இணைந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களை மனதார வாழ்த்துகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
யா/ கரணவாய்
பொன்னம்பல வித்தியாலயம்,
கரவெட்டி.
(சி/18553)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் ஆசிரியர்

**திரு. பொன்னையா வாகீசன்** அவர்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B. A ) (Hons.) பட்டம் பெறுவதையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் சிறப்புகள் பெற வாழ்த்துகிறோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

கலைவாணி கல்வி நிலையம்,
கோப்பாய் வடக்கு. (சி/18552)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்
செல்வன்
**சுந்தரலிங்கம் டினோஸ்சாந்த்**
(177 புள்ளிகள்)

2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தையும், தேசிய மட்டத்தில் ஐந்தாவது இடத்தையும்பெற்ற இவரை மேலும் கல்வியில் சிறந்து வளர வாழ்த்துகின்றோம்.

*சுதுமலை வடக்கு, மானிப்பாய்* ஏ.தனராஜ் (சுதா மாமா) (93015)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய மாணவி
**செல்வி மதுரா பாலசுப்பிரமணியம்**
5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்
146 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளதையிட்டு அகமகிழும் நாம்,
அன்னாரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(C/18540) அன்புள்ள மாமிமார்.

## தரம் 6 அனுமதி - 2002

2001ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எமது கல்லூரிகளில் விண்ணப்பப் படிவத்தைப்பெற்று அனுமதிக்காக 2001.10.30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்,
வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(C/18542)

## அனுதாப அலைகள்

கனடாவில் அகால மரணமடைந்த
**செல்வன் வேலாயுதபிள்ளை சுதர்சன்**

அவர்களது திடீர் மறைவினால் ஆறாத்துயரடைந்துள்ள வேலாயுதபிள்ளை - சந்திராதேவி குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கீதபூஷணம் **சி.கணபதிப்பிள்ளை** (சுழிபுரம்) குடும்பத்தினர்.
**திரு.மா.சாம்பசிவம்** (கல்வியங்காடு) குடும்பத்தினர். (93015)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பரும் வட இலங்கை சர்வோதயப் பொறுப்பாளருமான அறங்காவலர்
**கந்தையா திருநாவுக்கரசு**

அவர்கள் 03.10.2001 இல் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரது ஆத்மா இறைவனடியில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*258, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* - வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ். (93026)

## இதய அஞ்சலிகள்



வட இலங்கை சர்வோதயத் திட்டப் பொறுப்பாளரும்,
அமைப்பாளருமாகிய
**அமரர் கந்தையா திருநாவுக்கரசு**

அன்பிற்கு பெருமகனாய் -
சேவையின் திருமகனாய் உதித்த
எம் பெருந்தகையே! இன்று
தமிழினமே கலங்கி நிற்க
எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ?

அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டி நிற்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பச்சிலைப்பள்ளி வாழ் மக்கள், பளை.

## தெல்லிப்பழைக்கு 749 இலக்க புதிய பஸ் சேவை

வலி.தென்மேற்கு,ஒக்.6

யாழ்ப்பாணம்-தெல்லிப்பழைக்கான புதிய 749 இலக்க பஸ்சேவை கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது. வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சேவை தினமும் யாழ்ப்பாணம்-மானிப்பாய், ஆலங்குழாய், சண்டிலிப்பாய் ஊடாக நடைபெறும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் சு.மணிவாசகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-185)

## இலவச மருத்துவ முகாம்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்துடன் இணைந்து நடத்தும் விசேட இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலையின் பிரபல வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் இம்மருத்துவ முகாமில் முகாமிற்கு வருகைதரும் ஒழுங்கின்படியே பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் முதியோருக்கும் இடம்பெயர்ந்தோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## மீன்பிடியியல் கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.பல்கலைக்கழகத்தின் 2001 - 2002 கல்வியாண்டுக்கான மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கற்கைநெறியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் குறிப்பிட்ட தினத்தன்று காலை 8.30 மணிக்கு முன்பு சமுகமளிக்குமாறு கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் கே.சித்திரவடிவேலு அறிவித்துள்ளார். (ஐ-10)

## சமாராதனை

காஞ்சி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஞாபகார்த்தமாக இணுவில் காயத்ரீபீடம் தர்ம சாஸ்தா குருகுலத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிமுதல் காயத்ரீ ஜபஹோம தர்ப்பணங்கள், விப்ரபூஜை, பட்டமளிப்பு, சமாராதனை என்பன இடம்பெறவுள்ளன.

அமரர் பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்களுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக பரமேஷ்டிகுரு, பரமகுரு, ஸ்ரீகுருபூஜையை அங்கீகரித்து அனுக்கிரகிக்கப்படும்.

பிரம்மஸ்ரீ அ.நாகராசசர்மா (வட்டுக்கோட்டை), பிரம்மஸ்ரீ தேவராஜாக்குருக்கள் (மாவிசந்தை), பிரம்மஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் (சாவகச்சேரி) ஆகியோர் இதனை நிறைவேற்றுவர்.

'சிவாகம கிரியாதத்துவநிதி' என்னும் பட்டம் பிரம்மஸ்ரீ தி.கங்காதரக் குருக்கள் (சுவினை பிள்ளையார் கோயில்), பிரம்மஸ்ரீ சோ.வாகீஸ்வரக்குருக்கள் (ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் கோயில்), பிரம்மஸ்ரீ செ.ரவீந்திரக்குருக்கள் (வெளிவயல் அம்மன் கோயில்) ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது. (ஐ-152)

## காலமானார்

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும் அதன் தலைவரும் சமூக சேவையாளருமான கந்தையா திருநாவுக்கரசு கடந்த புதன்கிழமை இரவு கொழும்பிலுள்ள நவலோகா தனியார் மருத்துவமனையில் காலமானார்.

இவர் குறிப்பாக தீவக மக்களின் முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துச் செயற்பட்டவராவார். (ஐ-167)

## குணமாக்கல் வழிபாடு

இந்தியாவின் இறை தியான இல்லத்திலிருந்து வருகை தந்துள்ள இறை அனுபவம் மிக்க வழிகாட்டிகள் யாழ்.புனித மடுத்தீனார் சிறிய குருமட மைதானத்தில் திருவிழிப்பு குணமாக்கல் வழிபாடொன்றினை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு நடத்தவுள்ளனர். (ஐ-ரி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (06-10-2001) யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 20ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டத்தைப் பெறுகின்ற
எமது சகோதரரான **பிரம்மஸ்ரீ**
**பரமானந்தக்குருக்கள் வாசுதேவ சர்மா**
B.A.(Hons) (சம்ஸ்கிருதம்)
அவர்களை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்

*சாத்வீகன் கணனி அச்சகம்,*
*இணுவில் கிழக்கு, இணுவில்,*
*சுன்னாகம்.*

சிவஸ்ரீ
குமார சரவணபவக்குருக்கள்
குடும்பத்தினர் (93035)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை
சுன்னாகம்
2001ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தோர் விவரம்

| | |
|---|---|
| 1. ஜெ.பிரியா | 9. சி.பிரகாஷ் |
| 2. த.வரன் | 10. செ.மாதங்கி |
| 3. பா.சடகோபன் | 11. மு.ஜனார்த்தனி |
| 4. ஜெ.ஜெயவதனன் | 12. இ.உஷாந் |
| 5. ம.சஜீதா | 13. ஜெ.ஜஷிதா |
| 6. அ.றெஜினியா | 14. இ.தரணிகா |
| 7. ப.மைத்திரேயி | 15. மா.யூட்றெனிஸ் |
| 8. இ.மேகலா | |

இத்துடன் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த 9 பேரையும் உளமாரப் பாராட்டுகின்றோம். இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

(93027) - பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை 2001இல் சித்தியடைந்த மாணவர்களாகிய

| | | |
|---|---|---|
| பாலசுப்பிரமணியம் | கஜானன் | 139 புள்ளிகள் |
| பாலகிருஸ்ணன் | நிர்விகலா | 134 " |
| அருட்சோதி | கஜந்தினி | 134 " |
| ஜெகநாதன் | ஜனனி | 133 " |
| ஸ்ரீஸ்லங்கராசா | இம்றான் | 132 " |
| ஜெயராசா | அனுசியா | 125 " |
| தம்பையா | நிரோஜினி | 124 " |

ஆகியோரையும் இவர்களுக்கு அறிவூட்டிய ஆசிரியை **திருமதி வாசுகி சச்சிதானந்தம்** அவர்களையும் இவர்களை வழிநடத்திய எமது பாடசாலை முதல்வர் **திரு.த.சற்குணசர்மா** S.L.P.S.I அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(93025)

பாடசாலைச் சமூகம்
யா/மயிலணி சைவ ம.வி.,
சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (06-10-2001) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் சித்தமருத்துவத் துறையில் (B.S.M.S.) சித்தியடைந்து பட்டம்பெறும்
**மகாதேவன் நிரஞ்சன்**
அவர்களையும்
பொருளியல் சிறப்புக் கலைமாணி பட்டப்படிப்பில் சித்தியடைந்து பட்டம்பெறும்
**முரளீதரன் மாலினி**
அவர்களையும்
பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்கள் மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று சிறப்புடன் வாழ வண். கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

*12, சீனியர் ஒழுங்கை,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.*

சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்
குடும்பத்தினரும்,
சிவஸ்ரீ சி.ஸ்ரீதயாளன் குருக்கள்
(கண்ணன் ஐயா) குடும்பத்தினரும். (93020)

## கொக்குவில் இந்துக் கல்லூரி

மாணவ முத்துக்களை தம் இனிய மக்களாகக் கொண்டு அறிவைப் புகட்டி, பண்பை ஊட்டி, சிறந்த தலைவர்களாக மிளிர வைக்கும்
ஆசிரியப் பெருமக்களை
வாழ்த்தி வணங்குகின்றோம்!
**அன்புக்குரிய எமது ஆசான்களே!**

தாங்களும் தங்கள் குடும்பமும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடு வாழ எல்லாம்வல்ல ஆண்டவன் அருள் புரிவாராக!

பழைய மாணவர்களே! பெற்றோர்களே!

இன்று காலை 10.30 மணிக்கு எமது கல்லூரியில் ஆரம்பமாகும் ஆசிரியர் தினத்தில் தவறாது பங்குகொண்டு எமது அதிபர், ஆசிரியர்களை வாழ்த்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / பழைய மாணவர் சங்கம்.

(C/18544) **கொக்குவில் இந்து எமதே!**

# வாழ்த்தும் இறை ஆசியும்

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்
Dip.in Physical Education பட்டம் பெறவுள்ள
எமது கல்வி நிறுவன இயக்குநர்
மதிப்பிற்குரிய **திரு.சரா புவனேஸ்வரன்** அவர்களையும்
எமது கல்வி நிறுவன ஆசிரியர்கள்
திரு.B.வாசுதேவன், திரு.P.விமலன், திரு.S.சிவபாலசுந்தா
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற
இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள்,
சயன்ஸ் அக்கடமி, நல்லூர்.
(93066)



## இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக

பதவியுயர்வு பெற்று, இப்போது புதிய வங்கிச் சேவைகளை
வடபகுதிக்கு அறிமுகப்படுத்துவதற்காக வருகைதந்திருக்கும் எங்கள்
*முன்னாள் பிரதான முகாமையாளர்*

# திருமதி க.துரைராஜா

## அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்

தன்னிகர் இல்லாத் திறமை, தகைமைகள் கொண்டதாலே
பெண்ணினம் பெருமை கொள்ள பெரும் பதவி ஏற்று இப்போ
இன்னமும் புதிய சேவை இலங்கை வங்கி தனிலே சேர்க்க
வந்த எம் **A.G.M.** ஐ வாழ்த்திநாம் வரவேற்கின்றோம்.

இலங்கை வங்கி யாழ்.கிளை
ஊழியர்கள் சார்பில்
திருமதி கு.இராமலிங்கம்.
(93065)



# கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு கமநல சேவைக் குழுத் தலைவரும்
பெருங்காடு தெற்கு விவசாய
சம்மேளனத் தலைவரும்,
சமூக சேவையாளருமாகிய

## கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின்
மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
புங்குடுதீவு கமநல கேந்திர நிலைய
பெரும்பாக உத்தியோகத்தரும்,
கமநல சேவைக்குழு உறுப்பினர்களும்,
உத்தியோகத்தர்களும்.

*கமநல அபிவிருத்தித் திணைக்களம்,*
*மாவட்டக் காரியாலயம்,*
*யாழ்ப்பாணம்.*
(C/18546)


## காரைநகருக்கு மின்சார விநியோகம் நேற்று ஆரம்பம்

காரைநகர்,ஒக்.6

கடந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற்றடவையாக காரைநகர் பகுதிக்கான மின்சார விநியோகம் நேற்றுக் காலை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜேஎக்ஸ்செல்வநாயகம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச் சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் மின்பிறப்பாக்கி பொருத்துவதற்காக அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தைத் திறந்துவைத்தார். காரைநகர் கடற்படைத் தளபதி அசல பெர்னாண்டோ மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.(க-73)


**ஸ்ரீசெல்வா சினிமா**
யாழ்ப்பாணம்
பாண்டியராஜன், கரன்,
மற்றும் பலர் நடித்த
**கபடி கபடி**
CD பிரதி, புதிய வெளியீடு
*காட்சிகள்:*
*தினசரி: 10.30, 2.30. (பழைய நேரம்)*
(C/18558)

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரபுதேவா, சிம்ரன்,
ஆனந்தராஜ், மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த
**டைம்**
*தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)*
*சனி, ஞாயிறு: 10.30, 2.00, 5.00 (பு.நே.)*
(C/18457)

**நாகம்ஸ்** சுன்னாகம்
*அர்ஜுன், மனிஷாகொய்ராலா,*
*ரகுவரன் நடித்த*
**முதல்வன்**
(ரீலஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(93055)

**வாழ்த்துகின்றோம்**
இன்று பட்டம் பெற்று
கணனிக்கு மெருகூட்ட
வெளியேறும் எமது
நிறுவன இளம்
விரிவுரையாளர்
திரு.வ.சசிகுமார்
அவர்களை
வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்
-மாணவர்கள்-
*STP Computer World (Pvt) Ltd.*
*54A, Palaly Road, Kantharmadam.*
*Jaffna.*



**எனது பார்வைக் குறைபாடு நீங்கிவிட்டது!**
**என்னால் நடக்க முடிகிறது!**
**எனது மனக் கவலைகள் நீங்கி ஆறுதல் கிடைத்துவிட்டது!**

இவையெல்லாம் கடந்த சில நாள்களாக எமது மறைமாவட்டத்தில்
நடைபெற்றுவரும் குணமாக்கல் வழிபாடுகளில் இயேசுவின்
பரிசுத்த ஆவியின் வல்லமையால்
குணமடைந்த மக்கள் கூறிய சாட்சியங்கள்.
நீங்களும் குணமடைய, விடுதலைபெற விரும்புகிறீர்களா?
இந்தியாவின் இறை தியான இல்லத்திலிருந்து வருகை தந்திருக்கின்ற
இறை அனுபவம்மிக்க வழிகாட்டிகளினால் நடத்தப்படும்


# தியானம்
# குணமாக்கல் வழிபாடு

*இடம்* : **புனித லூர்து அன்னை ஆலயம் - பருத்தித்துறை**
*காலம்* : **07-10-2001 ஞாயிறு காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை**

அனைவரும் திரண்டு வாருங்கள்!
இறை அருள் பெற்றுச் செல்லுங்கள்!!
*- பருத்தித்துறை மறை கோட்ட குருக்கள்.*
(C/18554)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (06-10-2001)
யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விப் பட்டப்பின்
படிப்பில் பட்டம் பெறும்
எமது விஞ்ஞான ஆசிரியர்
**திரு.சுப்பிரமணியம் பரமேஸ்வரன்** (B.A.)
அவர்களை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்,
யா/நவாலி மகா வித்தியாலயம்.
(93044)



# வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## கல்வியாண்டு 2002/2003

யாழ்.பேராதனைப் பல்கலைக்கழகங்களின்
பட்டப் பாடநெறிகளான
**G.A.Q.** **1St in Commerce**
க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி.
அண்மையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத்
தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம்.
**விரிவுரைகள் நாளை ஆரம்பமாகின்றன**

இயக்குநர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
*57/48, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கி முன்பாக,*
*யாழ்ப்பாணம்.*
25 வருடங்களில் எண்ணற்ற பட்டதாரிகளை உருவாக்கிய நிறுவனம்.
(93061)



# கண்ணீர் அஞ்சலி



வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும், புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், புங்குடுதீவு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், பிரதேச செயலக மட்டச் சிறுவர் கண்காணிப்புக்குழு உப தலைவரும், சமூக சேவையாளருமாகிய

## கந்தையா திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் சர்வோதய வாழ் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

தகவல்:
பா.வாகீசன் (மைத்துனர்)
V.J.P.ரான்ஸ்போட் சேவை
*புங்குடுதீவு - 01*
(93043)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 10 - 1932



மறைவு 17 - 10 - 2000

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னராசா

**(புள்கை சின்னராசா)**

எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது. எம்முடனே வாழ்ந்துகொண்டிருக்கிறது. ஆண்டவனின் நிழலில் உங்களுக்கு ஆறுதல் கிடைத்திருக்க, எங்களுக்கு உங்கள் நினைவு ஆறாத் துயரினைத் தருகின்றது.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
*அரியாலை,*
*நாவலடி,*
*யாழ்ப்பாணம்.*
தற்காலிக முகவரி:
*நந்தாவில் றோட்,*
*கோண்டாவில்.*

பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி,**
**மக்கள்,**
**மருமக்கள்.**
(C/18557)

# தமிழர்களின் பிரதிநிதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் கலந்துகொண்டனர்.

அந்தந்தப் பிரிவு மக்களின் பிரதிநிதியை அந்தந்த இன எம்.பிக்கள் ஒன்றுகூடி ஏகமனதாகத் தெரிவுசெய்ய வேண்டும் என இருவரும் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழர் சார்பான உறுப்பினராக சட்டத்தரணி ஆர்.ஈ.தம்பிரட்ணத்தை தாங்கள் தெரிவு செய்துள்ளதாக கூட்டணி மற்றும் ரெலோ எம்.பிக்கள் தெரிவித்தனர்.

ஈ.பி.டி.பியின் எம்.பிக்கள் டாக்டர் குணசிங்கத்தின் பெயரைச் சிபார்சு செய்தனர்.

ஐ.தே.கட்சி எம்.பியான தி.மகேஸ்வரன், நீதிபதி எம்.இளஞ்செழியனின் பெயரை முன்மொழிந்தார்.

ஏகமனதான முடிவு எட்டப்படவில்லை.

இதனால் தனியறை ஒன்றில் தமிழ் எம்.பிக்கள் அனைவரும் ஒன்றுகூடி இவ்விடயம் குறித்து ஆராய்ந்து முடிவுசெய்யுமாறு பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் கோரினர். இதற்காகத் தனியறை ஒன்றும் ஒதுக்கப்பட்டது.

ஆனால் அக்கலந்துரையாடலில் பங்குபற்ற கூட்டணியின் எம்.பியான வீ.ஆனந்தசங்கரியும், ரெலோ எம்.பியான அடைக்கலநாதனும் (செல்வம்) மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் ஏகமனதாக இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் வாய்ப்பு நேற்று எட்டப்படமுடியாமற்போயிற்று.

இதேபோன்று மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளாக ஐயா பெரிசுந்தரம், இராதாகிருஷ்ணன் ஆகியோரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டன. மலையக எம்.பிக்கள் மத்தியிலும் இணக்கம் ஏற்படாததால் அந்தத் தெரிவும் திங்கள்வரை ஒத்திவைக்கப்பட்டது.

முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றுகூடி அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு தங்கள் பிரதிநிதியாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எல்.எம்.ஜமீலை ஏகமனதாகத் தெரிவுசெய்தனர்.

இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் ஆகியோரின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது தாமதமானதையடுத்து -

இந்தக் கவுன்ஸிலுக்கு தாங்கள் இருவரும் இணைந்து ஐந்து உறுப்பினர்களை நியமிப்பதை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைத்தனர்.

(உ-3-7)

# நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையை வைத்துக்கொண்டு எமது நிலைப்பாடுகளை அனுமானிக்க வேண்டாம்.

எங்களுடைய கொள்கையின் பிரகாரம் எமது நாட்டுக்கான உரிய அரசியல் முறைமை எது என்ற செயற்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நாம் சாதிக்க... [illegible] ...களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பல பிரகிருதிகள் அரசுக்குள் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த அரசில் அங்கம் வகிக்கும் சகல அமைச்சர்களும் கள்வர்கள். இந்த அமைச்சரவையிலுள்ள எவரையும் நேர்மையானவர்கள் என்று எம்மால் கூறமுடியாது - என்றார்.(க-7)


## வாழ்த்துக்கள்

## உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் 06.2001

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"

உலக ஆசிரியர் தினமாகிய இன்றைய தினம் எமது பெருமதிப்புக்குரிய அதிபர், ஆசிரியர்களை மனமார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். அதேவேளை மேற்படி அதிபர், ஆசிரியப் பெருந்தகைகளின் அர்ப்பணிப்பான சேவை எமது கல்லூரிக்கும், தமிழ்த்தாய்க்கும் கிடைக்கவேண்டுமெனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.* (C/18559) பழைய மாணவிகள் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



## IIS இன் மனமார்ந்த வாழ்த்துக்கள்

2001ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவிருக்கும் தேசத்தின் சிற்பிகள் அனைவரையும் வாழ்த்தி நிற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் எமது நிறுவனத்தைச் சேர்ந்த பகுதிநேர விரிவுரையாளர்களான

திரு. S.செந்தூரன்

திரு. S.சாந்திநிகேதன்

செல்வி S.சுஜித்தா

ஆகியோரையும் நிறுவனம் பெருமையுடன் வாழ்த்தி நிற்கிறது.

இயக்குநர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்.

(C/18541)



## தேவை

பாலர் பாடசாலை ஆசிரியர்கள் நால்வர் தேவை.

*விண்ணப்ப முடிவு திகதி:* 18.10.2001 வியாழக்கிழமை

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

*அனுப்பவேண்டிய முகவரி:*

செயலாளர்,
*100, மீனவ வீட்டுத்திட்ட செயலகம்,*
*சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.*

(93059)



## சாவற்கட்டு மீனவ வீட்டுத் திட்ட பாலர் பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்தல்

*விண்ணப்ப முடிவு திகதி* : 18.10.2001 வியாழக்கிழமை

*வயதெல்லை* : 3, 4, 5 வயதுக்குட்பட்ட பாலர்கள்

சீருடைகள், சத்துணவு, பாடஉபகரணங்கள் யாவும் இலவசம்!

குறிப்பு: இடமிருப்பின் அயற்கிராமத்துப் பிள்ளைகளும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விண்ணப்ப முகவரி: இ.சிவகுமாரன்,

செயலாளர், 100 மீனவ வீட்டுத் திட்ட செயலகம்,

சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.

(93058)



## ஆனைக்கோட்டை

## மகாஜன சனசமூக நிலைய

## பொன்விழா - 2001

*மேற்படி விழாவினை முன்னிட்டு நடத்தப்படும்*

1. சைக்கிள் ஓட்டம் - உள்ளூர், வெளியூர்
2. மரதன் ஓட்டம் - உள்ளூர், வெளியூர்

போட்டிகள் நாளை (7-10-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 5.30மணிக்கு (புதியநேரம்) ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- சைக்கிள் ஓட்டப் போட்டியாளர்கள் கவனத்துக்கு:

உள்ளூர் - சைக்கிள் வீல் - 44 - 18

வெளியூர் - சைக்கிள் வீல் - 48 - 18

- நிர்வாகம்.

(93011)



## D.C.M,

பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.பல்கலைக்கழக(வெளிவாரி)

G.A.Q: 1ST IN COM - 2002

பொருளியல்

S வரதராஜன்

ஆரம்பம்:- 07-10-01
ஞாயிறு 11.00 (ப.நே)

★ ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன ★



## பன்னிரு எழுத்தாளர்களின்

## 'இங்கிருந்து....'

சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

07-10-2001 ஞாயிறு காலை 9.30 மணியளவில்

யாழ். இந்துக்கல்லூரிக்கு

வாருங்களேன்!

- நண்பர்கள் வட்டம்.

(92943)



## இலவச கருத்தரங்கு

பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்

கொழும்பிலும் வெளிநாடுகளிலும் பாடசாலை கல்வியில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக்கப்பட்டுள்ள வேளையில் பின்தள்ளப்பட்டுள்ள எமது மாணவர்களின் அறிவை மேம்படுத்துவது எப்படி?

விடயம் : மாணவர் கல்வியில் கணனியும் தகவல் தொழில்நுட்பமும்

காலம் : 07/10/2001 (ஞாயிறு) நேரம் : காலை 9.00 மணி

இடம் : STP Computer World (Pvt.) Limited

STP Computer World (Pvt.) Ltd.,
54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
TP: 2674 e-mail : stpedu@hotmail.com



## SUBRA (14)

## சித்தன்கேணி

மாணவ மணிகளே!

சிங்களத்தில் சரளமாகப் பேச வேண்டுமா?

சிங்களத்தைச் சரளமாக எழுத வேண்டுமா?

இதோ ஆரம்பித்துவிட்டது!

உங்கள் அபிமான ஆசிரியர்

திரு.லீலா கிருஸ்ணான்

Mon - 4.00 - 6.00 p.m.



## நவீன கணனிகள் நம்பமுடியாத விலையில்



Pentium 4 (1.4 GHz)

Rs. 89,500/= மட்டுமே

மேலும் ரூபா 55,000/= இல் இருந்து......

IBM Cyrix-333, Pentium III 633,
Pentium III 866, Pentium III 933, Pentium III 1000

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

கணனிகளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் பெறமுடியும்.

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 283



## பட்டம் பெறும் குகன் கல்வி நிறுவன உறவுகளை

## மாரார்ட்டி வாழ்த்துகிறோம்

யாழ்.பல்கலைக்கழகம் என்ற பூங்காவில் நறுமணம் பரப்பி இன்று (06-10-2001) சனிக்கிழமை பூத்துக் குலுங்கும் ரோஜாக்களின் மத்தியில்,

☆ திரு. ந.ஜெயசுரேஷ் B.Com.

☆ திரு. பா.நாகேஸ்வரபாலா B.Com.

☆ திருமதி சுந்தரசிவி நாகேஸ்வரபாலா B.A.(HONS)

☆ திரு. இரா. அகிலன் B.A.(HONS)

☆ திரு. இ.இராஜேஸ்கண்ணன் B.A.(HONS)

☆ திருமதி. சுனிதா இராஜேஸ்கண்ணன் B.A.(HONS)

ஆகிய ரோஜாக்களை

குகன் கல்வி நிறுவனம், ஆவரங்கால்

வாழ்த்துகின்றது. வாழ்த்துவோர்:

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

குகன் கல்வி நிறுவனம், ஆவரங்கால்.

(92907)


## மரண அறிவித்தல்

### அனுசூயாதேவி கோமளஸ்வரன்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி அனுசூயாதேவி கோமளஸ்வரன் கடந்த புதனன்று (03.10.2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் கோமளஸ்வரனின் (இளைப்பாறிய பிரதம தபாலதிபர், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், நிலங்கன் (பிரதம ஆசிரியரும், பொது முகாமையாளரும் - தினக்கதிர், மட்டக்களப்பு), சுதேஷ்ணா (கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட 4ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதாஜினியின் (கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம் வருட மாணவி) அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, இராமநாதன் மற்றும் சரஸ்வதி, பத்மநாதன், இராசநாயகம், சாவித்திரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, யோகீஸ்வரன், செல்வராசா, மகேஸ்வரி, கமலாஜினிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு தெஹிவளை இனிஷியம் வீதி, 45/5 ஆம் இலக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.கோமளஸ்வரன்,
(முன்னாள் பிரதம தபாலதிபர் - யாழ்.பிரதம தபாலகம்)

*45/5, இனிஷியம் ரோட்,*
*தெஹிவளை.*
*T.P. - 716074*

(C/18560)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.